தரம் 5 - 11 வரை

எண்: 06 எழுத்து: 12
டிசம்பர் 2012

AHARAM அகரம்

www.aharam.lk

பரீட்சையை வெற்றி கொள்ளல்

12 DEC 2012

"நீங்கள் எவ்வளவு கற்றுள்ளீர்கள் என்பதைவிட நீங்கள் எந்தளவுக்கு பரீட்சைக்கு தயாராக உள்ளீர்கள் என்பது மிக முக்கியம். உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் அறிவு ரீதியாகவும் பரீட்சைக்குத் தயாராக இருப்பது பரீட்சையை வெற்றி கொள்ள உதவும்.

Des: Sinari



சில்லுகளின் மீது உலகை உருட்டிய
திருவாளர் ஹொண்டா

மர்யம் ஜமீலா

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

40/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர சேமிப்பு (Time Saving)

இவ்வருட நேரத்தை எவ்வாறு பயன்படுத்தினேன் என சற்று நிதானித்து சிந்திக்க வேண்டிய தருணங்கள் இவை! வருடம் முடிகின்ற இந்த சந்தர்ப்பத்தில் நேரத்தைப் பற்றி நாம் சிந்திப்பது அடுத்த வருடத்தில் நேரத்தை சேமிக்க உதவும்.

மேலைநாடுகளில் போக்குவரத்து நெரிசலாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தமது பயணங்களைத் தவிர்க்கவே மக்கள் விரும்புகிறார்கள். காரணம், அசௌகரியம் அல்ல; நேரம் வீணாவதே. நாம் விறுவிறு என மிக வேகமாக பணியாற்றும் போதும் சரி, ஓய்வாக இருக்கும்போதும் சரி நேரத்தை ஒழுங்காகப் பயன்படுத்தாவிட்டால் அது எம்மை விட்டும் விரைந்து சென்றுவிடும்; எம்மை தோற்கடித்துவிடும். எனவே, நேரத்தை வீணாக்காமல் பயன்படுத்த வேண்டும்.

நேரத்தைப் பயன்படுத்துவதோடு மாத்திரமல்லாமல் நேரத்தை சேமிப்பது தொடர்பாக இன்று அதிகளவில் பேசப்படுகிறது.
அதென்ன நேரத்தை சேமிப்பது?
"வீணாகும் நேரங்களைக் குறைப்பதும் நேரத்தை உச்ச அளவில் பயன்படுத்துவதுமே நேர சேமிப்பு ஆகும்."

இதனை எவ்வாறு செய்யலாம்?
குறிப்பிட்ட ஒரு வேலையை செய்வதற்கு நன்றாகத் திட்டமிட வேண்டும்.
எந்த ஒரு வேலையை செய்வதற்கும் எடுக்கும் காலத்தை ஓரளவு ஊகித்துக் கொள்ள வேண்டும்.
அந்த வேலையை செய்வதற்குத் தேவையான அனைத்தையும் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.
வேலை செய்கின்றபோது கவனம் வேறு திசையில் திரும்பிவிடாதவாறு மனதை ஒருமுகப்படுத்தி மனதை அவ்வேலையில் இலயிக்கச் செய்ய வேண்டும்.
குறிப்பிட்ட வேலை முடிந்ததும் செய்ய வேண்டிய அடுத்த வேலையையும் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.
அப்போது நேர விரயம் தடுக்கப்படும்.
உங்களின் முழுத் திறமையையும் பயன்படுத்தி குறிப்பிட்ட வேலையில் ஈடுபடுங்கள்.
நேர சேமிப்புக்கான நுட்பங்களையும் நுணுக்கங்களையும் கையாளுங்கள்.
வேலைகளைச் செய்வதற்கான குறுக்குவழி(Shortcut)களைக் கண்டறியுங்கள். இது நேரத்தை சேமிக்க உதவும்.
குறிப்பிட்ட வேலையை செய்வதற்கான மிகச் சிறந்த நேரத்தை (Best Time) அறிந்து வேலை செய்யுங்கள்.
இவ்வாறான விடயங்களைக் கையாண்டு நேரத்தை சேமிக்கப் பழகுவோம்! வாழ்வில் முன்னேறுவோம்!



www.aharam.lk
facebook இல் Like செய்யுங்கள்...
www. facebook.com/aharamJmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரம்

எண்: 06 டிசம்பர், 2012 எழுத்து: 12

பிரதம ஆசிரியர்
ஏ.ரி.எம். நௌபல்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

ஆசிரியர்
எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)

உதவி ஆசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்

சந்தா விபரம்
தனிப் பிரதி 40 /-
1 வருட சந்தா 700 /-
6 மாத சந்தா 350 /-

தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமடகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324
பெக்ஸ்: 011 2686030
E-Mail: *aharamipc@gmail.com*
www.facebook.com/aharamJmf

உள்ளே...

கட்டக் கலைஞன் சுக்கணாங் குருவி 06

15

13

சில்லுகளின் மீது உலகை உருட்டிய திருவாளர் ஹொண்டா

30

உங்கள் கற்றல் வழிமுறையை (Learning Style) கண்டறியுங்கள்

27

09

38

பாடத்திட்டம்

வரலாறு	18	தமிழ்	25
கணிதம்	32	புலமைப் பரிசில்	39

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ விடுமுறை!

அன்பின் மாணவ வாசகர்களே!

2012ஆம் கல்வி ஆண்டின் இறுதி இதழாக அகரம் உங்கள் பூங்கரங்களில் தவழ்வதில் பெருமிதமடைகின்றது, அல்ஹம்துலில்லாஹ்.

இறுதியாண்டுப் பரீட்சையை நிறைவு செய்துவிட்டு புதிய 'தரத்தில்' கல்வி பயிலும் எதிர்பார்ப்புகளோடு இருப்பீர்கள். புதிய தரத்திற்குரிய இலவச பாட நூல்களும் உங்களுக்கு கிடைத்திருக்கும். இனியென்ன, அந்தப் புத்தகங்களை சுமந்து கொண்டு டியூஷன் செல்ல வேண்டியதுதான்!? மற்றும் சிலரோ சினிமா, கேளிக்கை என பயனற்ற வகையில் பொழுதைக் கழிக்க ஆரம்பித்து விடுவர். இதுதான் இன்று பெரும்பாலானவர்களிடம் வளர்ந்துள்ள கலாசாரம்.

அன்பின் மாணவர்களே! ஆண்டின் இறுதி விடுமுறை இது. இந்த ஆண்டு இன்னுமொரு விடுமுறை கிடைக்காது. இந்த விடுமுறையில் பாடநூல்களைப் படிப்பதென்றும் சினிமா, கேளிக்கைகளில் காலத்தை வீணடிப்பதில்லை என்றும் தீர்மானியுங்கள்.

அப்படியானால் நீங்கள் செய்ய வேண்டியது என்ன? நல்ல நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், கவிதைப் புத்தகங்கள் என்பவற்றை வாசியுங்கள். அவை உங்களுக்கு நல்ல பல விடயங்களைக் கற்றுத்தரும்; கற்பனை வளத்தை மேம்படுத்தும்; இரசனை உணர்வை விருத்தி செய்யும்; நீங்கள் கதை, கவிதை, கட்டுரை போன்றவற்றை எழுதிப் பாருங்கள்.

எழுதிய கதையையும் கவிதையையும் எமக்கு அனுப்பிவையுங்கள். எப்போதும்போல நெறிப்படுத்தி அவற்றைப் பிரசுரித்து உங்களை ஊக்கப்படுத்த நாம் காத்திருக்கிறோம். நாளாந்த, வாராந்த பத்திரிகைகளில் வரும் அரிய தகவல்களைத் திரட்ட முயற்சி எடுங்கள். அவை எப்போதும் உங்களுக்குப் பயனளிக்கும். வீட்டில் தம்பி தங்கைகளோடு சேர்ந்து சேகரித்த தகவல்களைப் பயன்படுத்தி வினா- விடைப் போட்டி நடத்திப் பாருங்கள். தம்பி தங்கைகளது பொழுதுகளையும் பயனுள்ளதாகக் கழித்த நன்மை பெறுவீர்கள்.

மா, பலா, வாழை, கொய்யா போன்ற கனி தரும், பயன் தரும் இரண்டு மூன்று மரங்களை நடுங்கள். அவை பாதுகாப்பாக வளர ஏற்பாடு செய்யுங்கள். வீட்டுத் தோட்டமொன்றை செய்ய முயற்சி செய்யுங்கள். வீட்டுச் சூழலை அழகுபடுத்தும் பூஞ்செடிகள் சிலவற்றை நடுங்கள். சூழலுக்கு பயனளித்த பாக்கியத்தையும் நிலையான தர்மம் செய்த பலனையும் நிச்சயம் அடைந்து கொள்வீர்கள்.

பெற்றோர் ஓய்வாக இருக்கும்போது பயனுள்ள உரையாடல் ஒன்றைத் தொடங்கி விடுங்கள். நீங்கள் கண்ட ஒரு காட்சியாக, வகுப்பில் நடைபெற்ற ஒரு நிகழ்வாக அது இருக்கலாம். அந்தக் கலந்துரையாடலில் பயனுள்ள அனுபவப் பகிர்வை நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள்.

டிஸம்பர் விடுமுறைக்குள்ளேயே நமது ஹிஜ்ரி 1434 புத்தாண்டு பூத்திருக்கிறது. கடந்த இதழில் இது தொடர்பில் தரப்பட்ட வழிகாட்டல்களைப் பின்பற்ற முயற்சியுங்கள்.

இறுதியாக, இறை சிந்தனையை விட்டுத் தூரமாகி விடாதீர்கள். தொழுகையைப் பேணிப் பாதுகாத்து நிறைவேற்றுங்கள். அல்குர்ஆனை ஓதுங்கள். மொழிபெயர்ப்பை வாசித்துப் படியுங்கள். காலை, மாலை அவ்ராதுகளை நினைவில் கொள்ளுங்கள்.

இதுதான் விடுமுறை. அனுபவித்துப் பாருங்கள். உங்களுக்கும் ஆயிரமாயிரம் வழிகள் பிறக்கும்; தேன் சுவை உளமெங்கும் ஊற்றெடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் அற்புதம் அல்குர்ஆன்

அல்குர்ஆன் கூறும் கதைகள்

அபூ ஹானிம்

சென்ற இதழின் தொடர்...

ஆத் சமூகத்தின் சகோதரர்

ஹூத் (அலைஹிஸ்ஸலாம்)

(ஸூறா ஹூத் 50-60, ஹாக்கா 6-7 ஆகிய வசனங்கள்)

நபி ஹூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தம் சமூகத்தை விழிப்பூட்ட எடுத்த முயற்சிகளின்போதெல்லாம் அவர்கள் நையாண்டி செய்து பரிகசித்தார்கள்.

"உனக்குள் எமது தெய்வமொன்றின் சாபம் பீடித்து விட்டது. அது உன் சிந்தனையை குழப்பிவிட்டது. அதுதான் நீ பிதற்றித் திரிகிறாய். உனது வார்த்தைகள் எதுவும் உண்மையல்ல. நீ சொல்வதுபோல் நாம் ஏன் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோர வேண்டும்? அவன் மழையைத் தருகிறான்; செல்வ வளத்தை தாராளமாகத் தந்துள்ளான். போதுமான பலத்தை எமக்களித்துள்ளான். நீ சொல்வது போல நாம் மரணித்த பின் எழுப்பப்படுவோமா? நாம் உக்கி மண்ணோடு மண்ணாகி அழிந்து போனபின் இது எப்படி நடக்க முடியும்? இது என்ன புதுமையான செய்தி! நாம் மீள எழுப்பப்படுவதும் அதை நம்புவதும்... நாம் பிறந்தோம்... வாழ்ந்தோம்... மரணித்தோம்... இதையெல்லாம் காலம் தானே செய்கிறது. நீர் சொல்வதை நாம் நம்பப் போவதுமில்லை; எமது தெய்வங்களை வணங்குவதை நாம் விட்டு விடப்போவதுமில்லை. நீ உண்மையாளரா? அப்படியென்றால் நீ எச்சரித்த அல்லாஹ்வின் தண்டனையை கொண்டு வாரும்...!!"

அவர்கள் அல்லாஹ்வை மறுப்பதில் பிடிவாதமாகவே இருந்தார்கள். நபி ஹூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தமது பணியில் குறைவேதும் செய்யவில்லை. அவர்கள் முயற்சித்துக் கொண்டே இருந்தார்கள்; சோர்ந்து போகவில்லை. தனக்கெதிராக அம்மக்கள் அணிதிரண்டிருப்பதைப் பற்றி அலட்டிக் கொள்ளவுமில்லை; அவர்கள் ஏற்படுத்திய துன்பங்களைக் கண்டு அஞ்சவுமில்லை.

"நீங்கள் எனக்கெதிராக சூழ்ச்சிகள் செய்கிறீர்கள். என்னை அழித்துவிட ஒன்றுசேர்கிறீர்கள். நானோ என் இரட்சகனிடம் தவக்குல் (பாரஞ் சாட்டுதல்) வைத்து செயலாற்றுகிறேன். அவன் சர்வ வல்லமை பொருந்தியவன். எந்தவொரு உயிர்ப் பிராணியினதும் முன்னெற்றி ரோமத்தை அவன் பிடித்தவனாகவே இருக்கிறான். அவன் நேரான பாதையையே காட்டியிருக்கின்றான்" என்றுரைத்தவர்களாக தனது பணியைத் தொடர்ந்தார்கள்.

ஆத் சமூகத்தார் நிராகரிப்பில் மனமுரண்டாய் நிலைத்திருந்த அந்தப் பொழுதுகள்... அந்தோ பரிதாபம்...! கரும் மேகங்கள் வான்பரப்பை சூழத் தொடங்கின. அவர்கள் பெரும் மகிழ்ச்சி கொண்டார்கள். மழையை வரவேற்கத் தயாரானார்கள். வயல் நிலங்களை தயார்படுத்தினார்கள். அவர்கள் எப்படி அறிவார்கள், அது படைப்பாளனின் தண்டனை என்பதை! நபி ஹூத் (அலைஹிஸ்ஸலாம்) இதை அறிந்து கொண்டார். தம் சமூகத்தை எச்சரித்தார்.

"நீங்கள் நினைப்பதுபோல இதுவொன்றும் அருள் மழை தரும் மேகமல்ல. வேதனை வரப் போகிறது என்பதன் அடையாளம். நீங்கள்தானே அவசரமாகக் கேட்டீர்கள்!"

பேரோசை... வேகம்... சுழற்சி இதுதான் அவர்கள் மீது இறக்கப்பட்ட தண்டனைக் காற்றின் தன்மைகள். அவர்கள் கண் முன்னாலேயே அவர்களது கால்நடைகளும் ஒட்டகங்களும் பாலைவனத்தில் வெகு தொலைவில் தூக்கி எறியப்பட்டன. நடுங்கிப் போனார்கள்; விழி பிதுங்கி செய்வதறியாது திகைத்துப் போனார்கள்.

(41ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ مَسْعُودٍ عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ لَا يَدْخُلُ الْجَنَّةَ مَنْ كَانَ فِي قَلْبِهِ مِثْقَالُ ذَرَّةٍ مِنْ كِبْرٍ قَالَ رَجُلٌ إِنَّ الرَّجُلَ يُحِبُّ أَنْ يَكُونَ ثَوْبُهُ حَسَنًا وَنَعْلُهُ حَسَنَةً قَالَ إِنَّ اللَّهَ جَمِيلٌ يُحِبُّ الْجَمَالَ الْكِبْرُ بَطَرُ الْحَقِّ وَغَمْطُ النَّاسِ (مسلم)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழியல்லலாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "யாருடைய உள்ளத்தில் அணுவளவேனும் பெருமை இருக்கிறதோ அவர் சுவனம் நுழைய மாட்டார். அப்போது ஒரு மனிதர் எழுந்து, ஒரு மனிதன் தனது ஆடையும் பாதணியும் அழகாக இருக்க வேண்டும் என ஆசைப்படுகிறான். அது பெருமையாகுமா எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள், "நிச்சயமாக, அல்லாஹ் அழகானவன்; அவன் அழகாக இருப்பதை விரும்புகிறான். பெருமை என்பது சத்தியத்தை மறுப்பதும் மக்களை தாழ்வாக நினைப்பது மாகும் எனப் பதிலளித்தார்கள். (முஸ்லிம்)

மனிதன் இயல்பிலேயே அழகை விரும்பும் உணர்வு கொண்டவன். மக்கள் தன்னை அவதானிக்கும்போதும் மக்களுக்கு முன்னால் செல்லும் போதும் உரையாடும்போதும் அவலட்சணத் தோற்றத்தில் இல்லாமல், தன்னை முழுமையாக அழகுபடுத்திக் கொள்ள வேண்டும்; அப்போது தான் தன்னைப் பார்க்கின்றவர்கள் தன்னை நேசிப்பார்கள் என நினைக்கிறான்.

மற்றவர்கள் நேசிக்கக்கூடிய அழகிய தோற்றத்தில் மனிதன் காட்சியளிக்க வேண்டும்; அவலட்சணத் தோற்றத்தில் காட்சியளிக்கக் கூடாது என இஸ்லாம் எதிர்பார்க்கிறது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் தமது நண்பர்களை சந்திக்கச் செல்கின்ற சந்தர்ப்பங்களில் முகத்தையும் தாடியையும் தலையையும் சீர்படுத்தி அழகாக்கிக் கொள்கின்ற பழக்கம் உடையவர்களாக இருந்தார்கள். நபியவர்கள் பின்வருமாறு எடுத்துரைத்தார்கள்:

"நிச்சயமாக அல்லாஹ் தனது அடியானிடம் தனது அருட்கொடையின் அடையாளம் வெளிப்படுவதை விரும்புகிறான்." (அத்திர்மிதி)

அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியிருக்கின்ற மிகப் பெரும் அருட்கொடைதான் அழகிய தோற்றமாகும். அந்த வகையில் உடல், ஆடை, நகம் மற்றும் தலை ஆகியவற்றை தூய்மையாகவும் அழகாகவும் வைத்துக்கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். எனவேதான் நபியவர்கள் அல்லாஹ் அழகாக இருப்பது மாத்திரமல்லாமல் அழகை நேசிக்கின்ற ஒருவனாகவும் இருக்கிறான் என மேலுள்ள ஹதீஸின் வாயிலாக எடுத்துரைத்துள்ளார்கள்.

தன்னிடம் போதிய வசதியிருந்தும் தான் பணிவானவனாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கிழிந்த ஆடைகளையும் மிகப் பழைய ஆடைகளையும் அணிந்து கொள்கின்ற சிலரை நாம் காணமுடிகிறது.

ஒரு முஸ்லிம் தனது தோற்றத்துக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டிய அதே நேரத்தில் அவர் தன்னை அழகுபடுத்தி, தூய்மைப்படுத்திக் கொள்வதில் இஸ்லாம் அமைத்துள்ள நடுநிலைத் தன்மைக்கு பங்கம் ஏற்படும் அளவுக்கு எல்லை மீறிவிடக் கூடாது என்பதும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். இவ்வாறு எல்லை மீறுபவர்களையும் நபியவர்கள் எச்சரித்தார்கள்.

(26ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸீரா: அழகிய முன்மாதிரி 12

உங்கள் ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்படாதபோது...

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பத்ர் யுத்தக் கைதிகளைப் பற்றி ஸஹாபிகளுடன் ஆலோசனை செய்தார்கள். அப்போது அபூ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் "அல்லாஹ்வின் தூதரே! இவர்கள் எமது தந்தைவழி உறவினர்கள், எமது சகோதரர்கள் மற்றும் நெருக்கமான குடும்பத்தார். எனவே, இவர்களிடம் ஈட்டுத்தொகை (பித்யா) பெற்று விடுதலை செய்வோம். நாம் வாங்கும் ஈட்டுத்தொகை இறைநிராகரிப்பாளர்களை எதிர்ப்பதற்கு நமக்கு உதவியாக இருக்கும். அதிவிரைவில் அல்லாஹ் இவர்களுக்கு நேர்வழி காட்டக்கூடும். அப்போது இவர்களும் நமக்கு உதவியாளர்களாக மாறுவர்" என்று கூறினார்கள்.

பின்னர், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம், "கத்தாபின் மகனே! நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?" எனக் கேட்டார்கள்.

"அல்லாஹ்வின் மீது ஆணையாக! அபூ பக்ர் கூறிய ஆலோசனையை நான் விரும்பவில்லை. மாறாக, இவர்களைக் கொலை செய்வதே எனது யோசனை. எனது இன்ன உறவினரை என்னிடம் கொடுங்கள். அவர் கழுத்தை நான் வெட்டுகிறேன். அக்கீல் இப்னு அபூதாலிபை அலியிடம் கொடுங்கள். அலி அவரது கழுத்தை வெட்டட்டும். ஹம்ஸாவிடம் அவரது இன்ன சகோதரரைக் கொடுங்கள். ஹம்ஸா அவரது கழுத்தை வெட்டட்டும். இதன் மூலம் இணைவைப்பவர்கள் மீது எங்களது உள்ளத்தில் எந்த நேசமும் இல்லை என்று அல்லாஹ் அறிந்து கொள்வான். அது மட்டுமா! இப்போது கைது செய்யப்பட்டிருப்பவர்கள் குறைஷிகளின் தலைவர்களும் அவர்களை வழிநடத்தும் கொடுங்கோலர்களும் ஆவார்கள்" என்று உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்.

அபூ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியதையே நபியவர்கள் ஏற்று கைதிகளிடம் ஈட்டுத்தொகைப் பெற்று உரிமையிட்டார்கள். ஈட்டுத் தொகை ஆயிரம் வெள்ளி நாணயங்களிருந்து நான்காயிரம் வெள்ளி நாணயங்கள் வரை நிர்ணயிக்கப்பட்டது. மக்காவாசிகள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். மதீனாவாசிகளுக்கு எழுத, படிக்கத் தெரியாது. எனவே, ஈட்டுத் தொகை கொடுக்க இயலாத மக்கா கைதிகள் மதீனாவை சேர்ந்த பத்து சிறுவர்களுக்கு எழுத, படிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று பணிக்கப்பட்டனர்.

மறுநாள் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வந்தபோது நபியவர்களும் அபூ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் அழுதவர்களாக இருந்தார்கள்.

இதனைக் கண்ட உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! நீங்களும் உங்களது தோழரும் ஏன் அழுகிறீர்கள்? அழுகைக்குரிய செய்தி எதுவும் இருப்பின் கூறுங்கள், முடிந்தால் நானும் அழுகிறேன். முடியவில்லையென்றால் நீங்கள் அழுவதற்காக நானும் அழ முயற்சிக்கிறேன்" என்றார்.

அதற்கு நபியவர்கள் "ஈட்டுத்தொகை வாங்கியதன் காரணமாக உமது தோழர்களுக்கு ஏற்பட்டதை எண்ணி நான் அழுகிறேன். (அருகில் உள்ள ஒரு மரத்தை சுட்டிக் காண்பித்து) இம்மரத்தை விட நெருக்கமாக அவர்களுக்குரிய வேதனை எனக்குக் காண்பிக்கப் பட்டது" என்றார்கள்.

நாமும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பலருக்கு பல விடயங்களுக்காக பல ஆலோசனைகளைக் கூறியிருப்போம். சிலபோது எமது ஆலோசனைகள் ஏற்கப்படாமல் வேறொருவரின் ஆலோசனை அங்கீகரிக்கப் பட்டதால் பாதகமான விளைவுகள் ஏற்பட்டிருக்கும்.

அப்படி நிகழ்ந்தால் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் எவ்வளவு பண்பான முறையில் நடந்து கொண்டார்கள் என்பதை நாம் கண்டோமல்லவா? அதுபோல நாமும் நல்ல முறைகளை நம் வாழ்வில் கடைப்பிடித்து நற்பணிகளில் பங்களிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி) www.aliaalif.tk

கட்டடக் கலைஞன் தூக்கணாங் குருவி

அல்லாஹ் தனது படைப்பினங்களில் எமக்கு பல்வேறு அத்தாட்சிகளைக் காட்டுவதனைப் போன்று, அவனது படைப்பினங்கள் அமைக்கும் வீடுகளிலும் கூடுகளிலும் பல அத்தாட்சிகளைக் காண்பிக்கின்றான். மனிதன் அமைக்கும் அடுக்குமாடிக் கட்டடங்கள், சிலந்திகள் அமைக்கும் வலைகள், பீவர்களின் அணைக் கட்டுகள், தேனீக்கள், குளவிகளின் கூடுகள், அதே போன்று தூக்கணாங் குருவிகள் கட்டும் கூடுகள் காணப் படுகின்றன. இவை அனைத்தையும் ஆராயும்போது அவற்றில் அல்லாஹ்வின் படைப்பாற்றலை உணர முடியும். தூக்கணாங் குருவிகளது வாழ்வில் வெளிப்படும் சில இறை அத்தாட்சிகளை இங்கு சற்று அவதானிப்போம்.

தூக்கணாங் குருவிகள் ஆசியா முழுவதும் வாழ் கின்றன. குறிப்பாக தென் பகுதிகளிலேயே அதிகமாக வாழ்கின்றன. எப்போதும் கூட்டம் கூட்டமாகவே வாழும் இவை வயல்வெளி சார்ந்த பகுதிகளில் தங்களது வாழிடத்தை அமைத்துக் கொள்கின்றன.

அடர்த்தியான புதர்கள், நீரோடை சார்ந்த வனப் பகுதிகள், ஆற்றங்கரை மற்றும் குளக்கரைப் பகுதிகளில் நீண்டு, உயர்ந்து வளர்ந்திருக்கும் மரங்களில், குறிப்பாக ஆல, அரச மரக்கிளைகளில் இவை கூடுகளை அமைத்து வாழ்கின்றன. கூடுகளை அமைக்கும்போது மிகவும் பாதுகாப்பான சூழலை ஆராய்ந்து தெரிவுசெய்கின்றன. இதற்காக உயரமான முள்மரங்களை அவை தேர்ந் தெடுக்கின்றன. இதனால் பிற எதிரி விலங்குகளிலிருந்து அவை பாதுகாப்புப் பெறுகின்றன.

இப்பறவைகள் 15 செ.மீ. வரை வளர்ச்சியடையும் சிறிய பறவை இனமாகும். ஒவ்வொரு பிரதேசத்திலும் வாழும் தூக்கணாங் குருவிகள் வெவ்வேறான நிறங்களை, வித்தியாசமான குணவியல்புகளைக் கொண்டிருக்கும். சூழலுக்கு ஏற்றவாறு தமது உணவுப் பழக்கத்தையும் மாற்றிக் கொள்ளும். இவை அதிகமாக நெல், பயறு, சோளம், கோதுமை, திராட்சை போன்ற தானியங்களை உணவாகக் கொள்கின்றன. உணவு குறைவாகக் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் பயிர்களின் குருத்துகளையும் உண்கின்றன. அதே போன்று முட்டையிடும் காலங்களில் தவளை, மண்புழு, வெட்டுக்கிளி போன்ற சிறு உயிரிகளையும் உண்ணும். தமது குஞ்சுப் பறவைகளுக்கும் ஆரம்பப் பருவத்தில் இவற்றையே ஊட்டும்.

கூட்டம் கூட்டமாக வாழும் தூக் கணாங் குருவிகள் ஏதாவது உணவின் இருப்பிடத்தை அறிந்துகொண்டால் தன் கூட்டத்தை மொத்தமாக அழைத்துக் கொண்டு அவ்விடத்தை அடைந்து விடும். பல்வேறு திசைகளிலும் சிதறி உணவுகளை உண்டுவிட்டு கூட்டாகவே பறந்துவிடும். இதற்காக தமக்குள் இருக்கும் ஒரு தலைமைக்கு அவை கட்டுப்பட்டு நடக்கின்றன.

இவை தமக்கிடையே விசேடமான தகவல் பரிமாற்ற சமிக்ஞைகளைக் கையாள்கின்றன. தாம் கூட்டமாக உணவு உட்கொள்ளும்போது ஏதும் அவசர, பதட்டநிலை ஏற்பட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை க்ரீச் க்ரீச் என அலறலை எழுப்பி மற்ற பறவைகளை உசார்படுத்தும். அதுபோல் இனப் பெருக்க காலத்தை அடைந்தால் ஆண், பெண் குருவிகள் எதிர்பாலாரைக் கவர்வதற்காக இனி மையான சமிக்ஞைகளை அனுப்பு கின்றன. உணவுகளின் இருப்பிடத்தைக் கண்டால் வேறுவிதமான ஒலிகளை எழுப்புகின்றன. இவ்வாறு அற்புதமான தொடர்பாடல் திறன்களையும் அல்லாஹ் இவற்றுக்கு வழங்கியிருக்கிறான்.

ஜோர்டான் என்ற ஆய்வாளர் 1926ல் எழுதிய கட்டிடக் கலை தொடர்பான நூலில் தூக்கணாங் குருவிகளை சிறந்த கட்டிடக் கலைஞர்கள் என சிலாகிக் கின்றார். இவை கூடுகளை அற்புதமாகப் பின்னி அமைப்பதால் ஆங்கிலத்தில் Weaver Birds (நெசவுப் பறவைகள்) என அவை அழைக்கப்படுகின்றன.

பருவத்தை அடையும் ஓர் ஆண் பறவை முதலில் தனக்கென ஒரு கூட்டைக் கட்டிக் கொள்ளும். கூடு அமையப் பெறும் இடத்தில் உணவு, நீர் மற்றும் கூடு அமைப்பதற்கான புல், இலை, நார் போன்ற உபபொருட்கள் இருக்கின்றனவா என்பதை முன் கூட்டியே ஆராய்ந்து கொள்ளும்.

இவை கூடுகளைக் கட்டும்போது அக்காலத்தில் காற்று எத்திசையிலிருந்து அடிக்கிறதோ அதற்கு எதிர்த்திசையில் மரத்திற்கு மறைவாகவே கூடுகளைக் கட்டுகின்றன. இதனால் காற்றால் மரம் ஆடும்போது கூடு சேதமடையாமல் இருக்கும். அதேபோன்று மழையால் பாதிக்காமலும் கால இட சூழல்களைத் தேர்ந்தெடுக்கின்றன. வயல் பிரதேசங் களில் எத்திசையில் இவை கூடுகளைக் கட்டுகின்றன என்பதனை வைத்து ஆரம்ப காலங்களில் விவசாயிகள் மழை பொழியும் திசை, காற்றடிக்கும் திசை என்பவற்றை ஊகித்துக் கொள்வர்.

இடத்தைத் தெரிவுசெய்ததன் பின்னர் கடினமான புற்கள், வைக்கோல், இலை கள் மற்றும் மர நார்கள் என்பவற்றைக் கொண்டு இக்கூடுகளை அழகாகப் பின்ன ஆரம்பிக்கும். மிக நேர்த்தியாகவும் அழகாகவும் அடர்த்தியாகவும் இக் கூடுகள் கட்டப்படுகின்றன. 30 செ.மீ. நீளம் கொண்ட சுமார் இரண்டாயிரம் மூவாயிரம் பொருட்களைப் பயன் படுத்தி இவை கூடுகளைக் கட்டுகின்றன.

ஆண் பறவை கூட்டின் வெளிக்கட்டுமானப் பணிக ளைப் பூர்த்தி செய்ததும் கூட்டினருகில் இருந்து தனது இறக்கைகளை விரித்து இனிமையான சமிக்ஞைகளை அனுப்பி தனக்கான துணையைத் தேட ஆரம்பிக்கும். ஆண் பறவை நெய்த கூட்டின் அழகைப் பார்த்துவிட்டே பெண் பறவை அவ் ஆண் பறவையைத் தனது துணையாகத் தெரிவு செய்யும். பெண் பறவைக்கு கூடு பிடித்துவிட்டால் இரண்டும் ஜோடியாக இணைந்து கொள்ளும். அது முதல் கூட்டின் உட்கட்டுமானப் பணிகளை பெண் பறவை பூர்த்திசெய்ய ஆரம்பிக்கும். கூட்டை மெருகேற்றவும் பலப்படுத்தவும் தட்ப வெப்ப நிலையை சீராகப் பேணவும் பெண் குருவி களிமண் உருண்டைகளைக் கொண்டுவந்து கூட்டின் உட்பகுதியில் பூசும். ஆணும் சிலபோது பெண்ணுடன் சேர்ந்து இதில் உதவி புரிந்தாலும் அடுத்த வேலையாக ஆண் பறவை தனது வீட்டைச் சூழ 25 முதல் 30 வரை கொத்துக் கொத்தாகப் பல கூடுகளைக் கட்ட ஆரம்பிக்கும். ஆண் பறவை ஒரு கூட்டை முழுமையாகக் கட்டி முடிக்க 18 முதல் 20 நாட்கள் செல்கின்றன.

குழாய் போன்ற அமைப்பில் கீழ் நோக்கித் தொங்கும் அமைப்புக்களைக் கொண்ட கூடுகளைக் கண்டு பிரமித்த 'லியானார்டோ டாவின்சி' இதை உலகின் பேரதிசயம் என வியந்து கூறுகிறார். அவ்வளவு அழகாகவும் நேர்த்தியாகவும் வித விதமான அமைப்புக்களில் கூடுகளைக் கட்டுவது தூக் கணாங் குருவிகளுக்கு கைவந்த கலை.

இவை அமைக்கும் கூடுகளின் அற்புதத்தைப் பாருங்கள். நீண்ட குழல் போன்ற அமைப்பு கொண்ட இதன் கூடுகள் உள்ளே மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு சுமார் ஒரு அடி நீளம் வரை நீண்டிருக்கும். முதல் அறை நுழை வறையாகவும் ஆணின் ஓய்வறையாகவும் இருக்கும். இரண்டாவது அறை பெண்ணினதும் குஞ்சுகளினதும் அறையாக இருக்கும். மூன்றாவது அறை பின்வாசலாக, வெளியேறும் விதத்தில் அமையப் பெற்றிருக்கும். இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட கூடுகளில் இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு கூடே உலகின் மிகப் பெரிய தூக்கணாங் குருவிக் கூடு எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கோடை காலங்களைத் தவிர்த்து மழைக் காலங்களையே இவை கூடுதலாகத் தமது இனப்பெருக்கத்திற்குத் தெரிவு செய்கின்றன. சுமார் ஒரு மாத காலத்திற்கு இவை ஒன்றாக சேர்ந்திருக்கும். பெண் குருவி ஒரு தடவையில் 3 முதல் 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டைகளை இடும். தொடர்ந்து 14 முதல் 20 நாட்களுக்கு அம்முட்டையை அடைகாக்கும். அதன் பின்னர் குஞ்சுகள் வெளியுலகைத் தரிசிக்கும். பெண் பறவையே குஞ்சுகளைப் பராமரிக்கும். சிறிய குருவிகள் பறக்கும் தறுவாயை அடைந்ததும் தமது பெற்றோரின் வீட்டுக்குப் பக்கத்தில் சிறிய கூடுகளைக் கட்டிப் பழகும். இவ்வாறு ஆறு மாதங்கள் கடந்த பின்னர் குஞ்சுப் பறவை பெற்றோரை விட்டுத் தனியாப் பிரிந்து சென்று விடும்.



ஒரு வருட வளர்ச்சிக்குப் பின் பருவம் எய்திடும் ஆண், பெண் பறவைகள் மீண்டும் இனப் பெருக்கத்திற்குத் தயாராகும். வயது வந்த ஆண் தூக்கணாங் குருவிகள் பள பளப்பான மஞ்சள் நிறம் பூசிய பழுப்பு நிறம் கொண்ட தலை முடியைக் கொண்டிருக்கும். கண்கள் பார்வைக் கூர்மை பெறும். கண்களைச் சூழ கருவளையம் தோன்றும். இது அவற்றின் அழகை இன்னும் அதிகரிக்கும். உடலில் ஏற்படும் வர்ண மாற்றத்தை வைத்து அவை இனப்பெருக் கத்திற்குத் தயாராகியுள்ளதை அறிந்துகொள்ள முடியும். இனப் பெருக்கத்திற்குத் தயார் என்பதைக் காட்டுவதற்காக அவை ஒரு வகை சப்தத்தை எழுப்பியவாறு இறக்கைகளை விரித்து வானில் பறந்து நர்த்தனம் புரியும்.

'அபுல் பசல்' என்ற அரபுலக வரலாற்றாசிரியர் தனது 'அய்னு அக்பர்' என்ற நூலில் இன்று கிளிகளை வளர்ப்பது போல் மன்னர் அக்பர் காலத்தில் தூக்கணாங் குருவிகளை மனிதர்கள் பிடித்து, பயிற்றுவித்து, சிறு சிறு வித்தைகளைச் செய்யப் பயன்படுத்தியுள்ளனர் என எழுதியுள்ளார். பயிற்றுவிப்பாளன் குரல் எழுப்பியதும் அவை கீழே உள்ள கூழாங்கற்களையும் நாணயங்களையும் கொத்தி எடுத்து வரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவை எவ்வாறு திறமையாகக் கூடுகளைக் கட்டுகின்றன என்பது தொடர்பில் 'எடின்பர்க்' பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் பின் பல்கலையின் பேராசிரியர் 'பெட்ரிக் வோல்ஸ்' இவ்வாறு கூறுகிறார்:

"இனப்பெருக்க காலத்தின்போது கூடு கட்டத் தொடங்கும் தூக்கணாங் குருவிகள் கட்டும் ஒவ்வொரு கூட்டிலும் வேறுபாடு கள் தென்படுகின்றன. சில குருவிகள் வலமிருந்து இடமாகவும் இன்னும் சில இடமிருந்து வலமாகவும் கூடுகளைக் கட்டுவது தெரியவந்தது. ஆரம்பத்தில் இவை ஒரே விதத்தில்தான் கூடுகளைக் கட்டுவதாக நம்பப்பட்டது. ஆனால், இவ்வாய்வின் பின்னர் இவை முன்னுதாரண மின்றி சுயமாகவே கூடுகளை அமைப்பது தெரியவந்தது. முதலாவது முறை கட்டிய கூட்டுக்கு மாற்றமான விதத்தில்தான் அடுத்த முறை அவை கூடுகளைக் கட்டும். எனவே, இவை இயற்கையாகவே கூடுகளைக் கட்டும் ஆற்றலைப் பெற்று ள்ளன."

இது உயிரினங்களுக்கு அல்லாஹ் வழங்கியிருக்கும் உள்ளுணர்வு (இல்ஹாம்) ஆகும். தேன் பூச்சியை உதாரணமாக வைத்து அல்லாஹ் அல்குர்ஆனில் இவ்வாறு குறிப்பிடுகிறான்:

"உம் இறைவன் தேனீக்களுக்கு நீ மலை களிலும் மரங்களிலும் உயர்ந்த கட்டடங் களிலும் கூடுகளை அமைத்துக் கொள் என்று உள்ளுணர்வை அளித்துள்ளான்." (16: 68)

இலட்சியம் வெற்றி பெற...
(37ஆம் பக்கம் பக்கத் தொடர்...)

இந்த விசாரணை முடிந்த பிறகு உங்களைப் பற்றி இன்னும் விரிவாகத் தெரிந்து கொள்வீர்கள்! நடுநிலை தவறாத நீதிபதியாக இருந்து சுய விசாரணையை உங்களால் நடத்த முடியாது என்று சந்தேகம் வருகிறதா...? உங்களை நன்கு அறிந்த ஒருவரை உதவிக்கு வைத்துக் கொண்டு நீங்களே உங்களை குறுக்கு விசாரணை செய்யுங்கள். தற்காலிகமாக அது உங்களைத் தர்ம சங்கடத்தில் மாட்டிவிட்டாலும் எப்பாடுபட்டாவது அந்த உண்மையை வரவழையுங்கள்!"

புறப்படுங்கள் தோழர்களே! வெற்றி உங்களை அழைக்கிறது.

-நெப்போலியன் ஹில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து கொள்வோம்

01. நபி (ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம்) அவர்களின் உம்மத்தில் விசாரணையின்றி சுவர்க்கம் செல்பவர்கள் எத்தனை பேர்?

எழுபதாயிரம் பேர்

02. நாம் அணியும் ஆடைகளில் சிறந்த ஆடை எது?

தூய வெண்ணிற ஆடை

03. உமர் (ரழியல்லாஹுு அன்ஹுு) அவர்கள் எந்த தொழுகையின் பின் கத்தியால் குத்தப்பட்டார்கள்?

சுப்ஹுு தொழுகை

04. மறுமை எந்த நாளில் வரும்?

வெள்ளிக்கிழமை

05. சுவனவாசிகள் முதலில் உண்ணும் உணவு எது?

மீனின் ஈரல் பகுதி

06. ஷஹீதுடைய எந்தப் பாவம் மன்னிக்கப்பட மாட்டாது?

கடன்

07. குழந்தைகளுக்கு தாய் எவ்வளவு காலம் பாலூட்ட வேண்டும்?

இரண்டு ஆண்டுகள்

எம்.என். அப்துல்லாஹ், தரம் - 09
இப்னு மஸ்ஊத் அறபுக் கல்லூரி
வத்தளை

மனிதனாக வாழ சில வழிகள்

மிகவும் மதிப்பிற்குரியவர்கள்	- தாய், தந்தை
மிக மிக நல்ல நாள்	- இன்று
மிகப் பெரிய வெகுமதி	- மன்னிப்பு
மிகவும் வேண்டியது	- பணிவு
மிகவும் வேண்டாதது	- வெறுப்பு
மிகப் பெரிய தேவை	- நம்பிக்கை
மிகக் கொடிய நோய்	- பேராசை
மிகவும் சுலபமானது	- குற்றம் காணல்
நம்பக்கூடாதது	- வதந்தி
ஆபத்தை விளைவிப்பது	- அதிக பேச்சு
செய்யக் கூடியது	- உதவி
செய்யக் கூடாதது	- நம்பிக்கைத் துரோகம்
நழுவவிடக் கூடாதது	- வாய்ப்பு
மறக்கக் கூடாதது	- நன்றி
வரக்கூடாதது	- கோபம்
ஒவ்வொரு நிமிடமும் இருக்க வேண்டியது	- இறையச்சம்

எம்.எச்.எம். ஹஸ்மின், தரம் - 10
மடிகே மு.ம.வி.
முதுன்டுவ

சிந்தனைக்கு சில...
சிந்திக்க சில...

இருளைப் போக்குவது சூரிய ஒளி;
மனிதனின் இருளைப் போக்குவது அறிவொளி.

நாவடக்கம் மரியாதை காக்கும்;
தன்னடக்கம் தன்மானம் காக்கும்.

தீராத பகையும் கூடாது;
தீராத கவலையும் கூடாது.

குருடனுடன் சென்றாலும்
குறுப்புக்காரனுடன் செல்லாதே!

நீ புகழை வெறுத்தால்
புகழ் உன்னைத் தேடி வரும்.

எப். ஹப்ஸா அத்தாஸ், தரம் - 10
மடிகே மு.ம.வி.
தெல்தெனிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைத் துளிகள்...

- ⇨ நீங்கள் முதலில் உங்களைத் திருத்துங்கள்; பின்னர் அடுத்தவர்களைத் திருத்துங்கள்.
- ⇨ முதலில் பண்பாட்டையும் ஒழுக்கத்தையும் பற்றிப் பிடியுங்கள்; மீதியாய் இருக்கும் அத்தனை விடயங்களும் உங்களைத் தேடி வரும்.
- ⇨ அடுத்தவர்களின் மனதை புண்படுத்த வேண்டாம்.
- ⇨ இவ்வுலகிலே நீங்கள் அநீதியாக நடந்தால் உங்களது அனைத்து விடயங்களிலும் நீங்கள் அநீதியைக் காண்பீர்கள்.
- ⇨ நீ தீய வேலைகளைச் செய்ய உதவுவதை விடவும் உதவி செய்யாமல் இருப்பது சிறந்தது.
- ⇨ ஆசிரியர்களின் மனதைப் புண்படுத்தாதே! நீ ஒரு காலத்தில் ஆசியரானால் உன் மனதை அடுத்தவர்கள் புண்படுத்தலாம்.
- ⇨ அடுத்தவர்களை கேலி செய்யாதே! நீ அனைவரின் முன்னாலும் கேலிபண்ணப் படலாம்.

எம். முன்ஸிப் முஸ்லிமீன், தரம் - 11
ரோயல் கல்லூரி, கொழும்பு - 07

துணுக்குகள்

- இலங்கையின் வரைபடத்தை வரைந்தவர்
  - குளோடியஸ் தொலமி ஆவார்.
- பௌத்த கொடியை உருவாக்கியவர்
  - கேணல் ஒல்கோட் ஆவார்.
- இலங்கையின் உயரமான அணைக்கட்டு
  - விக்டோரியா
- இலங்கையில் இலவசக் கல்வியை அறிமுகப்படுத்திய ஆண்டு
  - 1945
- பௌத்தர்களின் விஷேட வைபவங்கள்
  - வெசாக், பொசன், சித்திரைப் புதுவருடம்
- இலங்கையின் அகலமான நதி
  - களனி கங்கை

அடக்கத்தின் அருமை

- அடக்கம் உன் நிலையையே உயர்த்திவிடும். காரணம், பரிதியிடம் இருந்துதான் பால் நிலா ஒளியைப் பெறுகின்றது.

- அடக்கமே இணைந்த நட்பின் முதலீடாகும்.

- அடக்கமே ஒரு மனிதனை உயர்த்தி விடுகின்றது. அதுவே தகுதியுடைய மக்களுக்கு ஒரு தனி அணியாகும்.

- தகைமை இன்றி வேறெதுவும் ஒருவனை மனிதனாக்க முடியாது.

- அறிவுள்ள மனிதன் தேர்ந்தெடுப்பதும் அடக்கம்தான்.

- கனி நிறைந்த கிளை, தரைமீது தானே தன் தலையைச் சாய்த்து விடுகின்றது. அடக்கம் உன் குணத்திற்கு அணிசேர்க்கும்.

ரிஸ்வியா இம்ரான்
வாழைச்சேனை

- இலங்கையின் கலாசார முக்கோண வலயம்
  - அநுராதபுரம், கண்டி, பொலநறுவை
- இலங்கையின் நீளம், அகலம்
  - முறையே 447km, 210km
- இலங்கையின் மிக உயர்ந்த நீர்வீழ்ச்சி
  - பம்பரகந்த
- இலங்கையின் மிக உயர்ந்த மேட்டு நிலம்
  - ஹட்டன் மேட்டு நிலம்
- இலங்கையை முதன்முதலில் ஆட்சிசெய்தவன்
  - விஜயன்
- கண்டியை ஆண்ட கடைசி மன்னன்
  - ஸ்ரீ விக்கிரமராஜ சிங்கன்

ஏ.எல்.எம். நபீல், தரம் 5
மட்/செம். அல்ஹம்ரா வித்தியாலயம்,
செம்மண்ணோடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பௌத்த வரலாற்று நூல்கள் சில...

- இலங்கையில் முதன்முதலாக எழுதப்பட்ட பௌத்த வரலாற்று நூல்
  - **தீபவம்சம்**
- துட்டகைமுனு மன்னனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூல்
  - **மகாவம்சம்**
- மகாவம்சத்தின் 2ஆம் பகுதியெனக் கருதப்படும் ஆதாரம்
  - **சூளவம்சம்**
- தலதா பிக்குகளின் வரலாற்றைக் கூறும் நூல்
  - **தாதவம்சம்**
- ஜய ஹ மகாபோதி பிக்குகளின் வரலாற்றை கூறும் நூல்
  - **போதிவம்சம்**
- புத்த புத்திர பிக்குவால் எழுதப்பட்ட நூல்
  - **பூஜாவலிய**

ஏ. ஆஸிப், தரம் - 10
பு/ ஹிதாயத் நகர் மு.ம.வி.

அல்குர்ஆனின் அமைப்பை தெரிந்து கொள்வோமா?

- ஜுஸ்கள் - 30
- மன்ஸில்கள் - 07
- ஸூறாக்கள் - 114
- மக்கி ஸூறா - 86
- மதனி ஸூறா - 28
- ஆயத்துக்கள் - 6666
- சொற்கள் - 76,934
- எழுத்துக்கள் - 323,760
- ஸஜ்தாக்கள் - 15
- பிஸ்மி இல்லாத ஸூறா - ஸூறதுத் தௌபா
- 2 தடவை பிஸ்மி ஓதப்படும் ஸூறா - ஸூறதுந் நம்ல்
- அல்குர்ஆனில் கூறப்படும் பெண்மணியின் பெயர் - மர்யம் (அலைஹிஸ்ஸலாம்)
- அல்குர்ஆனில் கூறப்பட்ட ஸஹாபியின் பெயர் நபியின் வளர்ப்பு மகன் ஸைத் (ரழியல்லாஹு அன்ஹு)

எம்.என்.எப். சுஹ்ரா, தரம்- 10
அல்ஹிலால் ம.க.
நீர்கொழும்பு

உங்களுக்குத் தெரியுமா?

உலகிலேயே மிகப் பெரிய சிலை? லிபர்டி சிலை

இது அமெரிக்காவில் உள்ளது. இது மிகப் பெரிய உலோகச் சிலையாகும். இதன் உயரம் 46 மீற்றர். இது 1.3 மில்லியன் டொலர் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

சாய்ந்த கோபுரம் எங்கு அமைந்துள்ளது? இத்தாலியில். பொனானுஸ் எனும் கட்டிட நிபுணரினால் கட்டப்பட்ட இது மேற்கு திசையில் சற்று சாய்ந்துள்ளது.

மிகப் பெரிய பிரமிட் எங்கு அமைந்துள்ளது? எகிப்தில். இது 13 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இது கருங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு கல்லின் நிறை 2 தொன் ஆகும். இவ்வாறு 230,000 கற்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

தாஜ்மஹால் கி.பி. 1632 சாஜஹானால் அமைக்கப்பட்டது. இது இந்தியாவில் ஆக்ரா மாநிலத்தில் அமைந்துள்ளது.

ஆர்.எம். அஸ்ஸாம், தரம்- 05
தி/ அல்தாரிக் மகா வித்தியாலயம்
கந்தளாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் அரங்கம்

பிரிக்கும் நீரிணையும் பிரிபடும் நாடுகளும்

பாக்கு நீரிணை	இந்தியா	இலங்கை
பீரிங் நீரிணை	ஆசியா	வட அமெரிக்கா
பனாமா நீரிணை	வட அமெரிக்கா	தென் அமெரிக்கா
போவர் நீரிணை	பிரான்ஸ்	பிரித்தானியா
மாஹலன் நீரிணை	தென் அமெரிக்கா	தியாரெடல் பியூகா தீவு
மொஸாம்பிக் நீரிணை	ஆபிரிக்கா	மடகஸ்கார்
மலாக்கா நீரிணை	மலேசியா, சிங்கப்பூர்	சுமாத்திரா தீவு

ஏ.எம். அகீல், தரம்- 07
பொ/ அல்ஹிலால் ம.க.
தம்பாளை

உங்களுக்கு தெரியுமா?

- பங்களாதேஷின் தலைநகரம்
  - டாக்கா
- இந்தியாவின் ஜனாதிபதி
  - பிரணாப் முகர்ஜி
- அயடீன் அதிகமாக உள்ள உணவு
  - கடல் மீன்
- உலகின் கூரை என அழைக்கப்படும் இடம்
  - பமீர் மேட்டு நிலம்
- 20ஆம் நூற்றாண்டில் சிறந்த இலக்கியவாதியாக தெரிவு செய்யப்பட்டவர்
  - வில்லியம் ஷேக்ஸ்பியர்
- விண்வெளிக்கு முதலில் சென்ற பெண் உல்லாசப் பயணி
  - அனுஸ்கேக் அன்காகரி

எம்.டீ.எம். றாயித், தரம்- 06
அல்மனார் மத்திய கல்லூரி
மருதமுனை

சில வரலாற்றுக் குறிப்புகள்

01. இலங்கையில் முதன் முதலில் தேயிலை ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்ட இடம் எது, ஆண்டு எது? தலவாக்கலை, 1925ம் ஆண்டு
02. இறப்பர் செய்கையை இலங்கையில் அறிமுகம் செய்தவர்கள் யாவர்? பிரித்தானியர்
03. வன்னி அரசுகளின் இறுதி சிற்றரசன் யார்? பண்டார வன்னியன்
04. கண்டி இராச்சியத்தில் நாயக்க வம்ச முதல் மன்னன் யார்? ஸ்ரீ விஜய இராஜசிங்கன்
05. கைத்தொழில் புரட்சி உலகில் முதன்முதலில் ஆரம்பமான நாடு எது? இங்கிலாந்து
06. வரலாறின் தந்தையாக கருதப்படுபவர் யார்? ஹெரடொரஸ்
07. வானசாஸ்திரத்தின் தந்தையென கருதப்படுபவர் யார்? நிக்கலஸ் கொப்பர்னிக்கஸ்

எம்.ஆர்.எம். அஸாம், தரம்- 10
ஆலங்குடா மு.ம.வி.
புத்தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்வில் அரபு மொழி

اللغة العربية

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

اِسْمُ الفَاعِلِ பெயரெச்சம்

சென்ற இதழ் தொடர்...

5. தொடர்ந்து ஒரு செயல் நடப்பதனைக் காட்ட اِسْمُ الفَاعِلِ பயன்படுத்தும் முறை

⇨ மாணவன் பாடசாலைக்கு போய்க் கொண்டிருக்கிறான். اَلطَّالِبُ ذَاهِبٌ إِلَى الْمَدْرَسَةِ

⇨ பாத்திமா கதிரையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். فَاطِمَةُ جَالِسَةٌ عَلَى الْكُرْسِي

6. ஒரு விடயத்தை தொடர்ந்து செய்பவரை குறிக்க اِسْمُ الفَاعِلِ பயன்படுத்தும் முறை

எழுத்தாளன்	كَاتِبٌ	———	كَتَبَ	எழுதினான்
நீதிபதி	اَلْقَاضِي	———	قَضَي	தீர்ப்பளித்தான்
திருடன்	اَلسَّارِقُ	———	سَرِقَ	திருடினான்
பயணி	مُسَافِرٌ	———	سَافَرَ	பயணம் செய்தான்
போராளி	مُقَاتِلٌ	———	قَاتَلَ	போராடினான்
ஆசிரியர்	اَلْمُدَرِّسُ	———	دَرَّسَ	கற்பித்தான்

اِسْمُ الْمَفْعُوْلِ பெயரெச்சம்

இது பெயரெச்சமாக வரக்கூடிய ஒன்றாகும். اِسْمُ الْمَفْعُوْلِ என்பது செயற்பாட்டு வினையின் பெயர்ச் சொல்லாகும். உதாரணத்தின் மூலம் இதனை விளங்கிக் கொள்ள முனைவோம்.

كَتَبَ என்ற வினை ஒரு செய்வினையாகும். இதனை செயற்பாட்டு வினையாக்கும்போது كُتِبَ என மாறி வரும்.

செயற்பாட்டு வினையின் اِسْمُ الفَاعِلِ என்ற பெயர்ச்சொல் வடிவங்கள் اَلْمَفْعُوْلُ என்ற அமைப்பில் இருக்கும்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. கதவு திறக்கப்பட்டது. فُتِحَ الْبَابُ

கதவு திறக்கப்பட்டுள்ளது. الْبَابُ مَفْتُوحٌ

02. மரம் வெட்டப்பட்டது. قُطِعَتِ الشَّجَرَةُ

மரம் வெட்டப்பட்டுள்ளது.

الشَّجَرَةُ مَقْطُوعَةٌ

03. தேனீர் கேத்தல் மேசையின் மீது வைக்கப் பட்டது.

وُضِعَ إِبْرِيْقُ الشَّايِ عَلَى الْمَكْتَبِ

தேனீர் கேத்தல் மேசையின் மீது வைக்கப்பட் டுள்ளது.

إِبْرِيْقُ الشَّايِ مَوْضُوْعٌ عَلَى الْمَكْتَبِ

04. இந்தப் படம் மாணவனால் வரையப்பட்ட தாகும். هَذِهِ الصُّوْرَةُ مَرْسُوْمَةٌ بِالطَّالِبِ

* மூன்று எழுத்துக்களைக் கொண்ட இறந்தகால வினைச்சொல்லின் இறுதி எழுத்து ي வாக வரக்கூடிய வினைச்சொற்களின் الْمَفْعُوْلُ அமைப்பு பின்வருமாறு அமைந்திருக்கும்:

رَمَى - رُمِيَ - مَرْمِيٌّ

01. رُمِيَتِ الْكُرَةُ

பந்து எறியப்பட்டுள்ளது. اَلْكُرَةُ مَرْمِيَّةٌ

02. قَضَى - قُضِيَ - مَقْضِيٌّ

இந்த விடயம் தீர்ப்பளிக்கப்பட்டதாகும்.

هَذَا الأَمْرُ مَقْضِيٌّ

03. بَنَى - بُنِيَ

இந்த வீடு ஒரு வருடத்துக்கு முன்னர் கட்டப் பட்டது.

هَذَا الْبَيْتُ مَبْنِيٌّ قَبْلَ سَنَةٍ

* இறுதி எழுத்து اَلِفٌ ஆக வரக்கூடிய மூன்று எழுத்துக்களைக் கொண்ட இறந்தகால வினைச் சொற்களின் الْمَفْعُوْلُ அமைப்பு பின்வருமாறு அமையும்:

அணிவித்தான் كَسَا -

அணிவிக்கப்பட்ட كُسِيَ - مَكْسُوٌّ

01. هَذَا الطِّفْلُ مَكْسُوٌّ بِأُمِّهِ

இந்தக் குழந்தை தனது தாயின் மூலம் அணிவிக்கப்பட்டிருக்கிறது.

02. دَعَا - دُعِيَ - مَدْعُوٌّ

رَجَا - رُجِيَ

مُسَاعَدَةُ الشَّعْبِ الفِلَسْطِنِيِّ مَرْجُوَّةٌ

பலஸ்தீன மக்கள் உதவியளிக்கப்படுவது எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

* நடு எழுத்து اَلِفٌ ஆனது நிகழ்காலத்தில் ي வாக மாற்றப்படும் வினைச்சொற்களில் الْمَفْعُوْلُ அமைப்பு பின்வருமாறு அமையும்:

بَاعَ - يَبِيْعُ

بِيْعَ - يُبَاعُ - مَبِيْعٌ

هَذِهِ الدَّرَّاجَةُ مَبِيْعَةٌ

இந்த சைக்கிள் விற்கப்பட்டுள்ளது.

* நிகழ்காலத்தின்போது நடு எழுத்து وَ ஆக மாறக்கூடிய வினைச்சொற்களில் الْمَفْعُوْلِ பின்வருமாறு அமையும்:

قَالَ - يَقُوْلُ

சொல்லப்பட்ட قِيْلَ - يُقَالُ - مَقُوْلٌ

* மூன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களைக் கொண்ட இறந்தகால வினைச் சொற்களில் الْمَفْعُوْلُ அமைப்பில் فَعَّلَ பின்வருமாறு அமையும்:

فَعَّلَ الْمَفْعُوْلُ

كَرَّمَ

كُرِّمَ - يُكَرَّمُ - مُكَرَّمٌ

مَكَّةُ الْمُكَرَّمَةِ

نَوَّرَ

نُوِّرَ - يُنَوَّرُ - مُنَوَّرٌ

الْمَدِيْنَةُ الْمُنَوَّرَةُ

நிறந்தீட்டப்பட்ட لَوَّنَ - مُلَوَّنٌ

هَذِهِ الصُّوْرَةُ مُلَوَّنَةٌ

இந்தப் படம் நிறந்தீட்டப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"I learn every day"

Assalamu alaikum dear friends!

It is a great pleasure for me to meet you this December, for many reasons. Reason number one, it has been two years since I started to meet you through this page, and it's the second anniversary for me with you. Reason number two, it's school holidays!!! What else on earth can make us happier than this!! And I have another reason, this time our page is a Girls' special!! So boys,, beware of reading our page this time.

People think that girls like to

- Become slim and pretty
- Eat lots of sweets
- Play with teddy bears
- And keep on talking!!!

What a wrong assumption!!! Right girls???

What if the others can think about you this way

1. she is truthful
2. she does not backbite
3. she avoids suspicion
4. she is gentle and kind
5. she is shy
6. she is generous
7. she is not envious
8. she is easy on people, not hard
9. she keeps secrets
10. she is a good Muslimah

YES Girls !!! You can do it, work on these TEN BEAUTIFUL QUALITIES and happiness would be yours.

All the best from my side, to achieve these qualities, May Allah help all of us !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Now fill in this form if you are a girl

My favourite color is __________. I love to decorate my room with ________________. I always help my mother in ____________. I follow _____________ as my role model. I can cook __________ and ____________________ very well. I am neat and tidy and I have a bath every ________________. I never --________________. I think I am a good, interesting, ____________________ girl.

YOUR'S

See how I filled it up.

My favourite color is **White**. I love to decorate my room with **roses**. I always help my mother in **cooking**. I follow **Aysha (Ral)** as my role model. I can cook **chicken** and **vegetables** very well. I am neat and tidy and I have a bath every **Sundays, Fridays and Wednesdays**. I never **make fun of others**. I think I am a good, interesting, **creative** girl.

YOUR'S

Sister Rumman

Now some interesting creations of girls from various parts of the island....

Your corner

GIRLS'

Water is our life blood



Water is one of the most important basic elements necessary for life. A land without water is a place where there aren't any human beings, animals or plants. That is why water is regarded as an invaluable resource. Although water is an important substance, man has not realized the value of it and man has been misusing water for a long time. The water of the village tanks is used for various purposes such as washing, bathing and drinking . Almost all our streams, river tanks and other waterways are contaminated by the man and the water is not at all safe for drinking. Let's preserve water resources forever

Amina Mubarak, 10-D
ST.Andrew's B.M.V
Nawalapitiya

Proverbs and Tamil meanings

1. All that glitters is not gold
   மின்னுவதெல்லாம் பொன்னல்ல
2. An empty vessel makes more noise
   குறைகுடம் தளம்பும் நிறை குடம் தளம்பாது
3. An old thief one day caught
   பல நாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்
4. Barking dogs seldom bite
   குரைக்கிற நாய் கடிக்காது
5. Look before you leap
   ஆழமறியாமல் காலை விடாதே
6. Misfortunes never come single
   பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்
7. Man proposes, God disposes
   தான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்
8. The face is the index of the mind
   அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
9. Too much of anything is good for nothing
   அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
10. Union is strength
    ஒற்றுமையே பலம்

M.J.F.Mubashsira
P/Fathima B.M.V
Gr-09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

My School



My school is Str/Saboor Vidyalaya. It is in Sammanthurai . Our principal is Mister M.M.M. Ibrahim.. There are twenty five teachers and three hundred and seventy five students in our school. It is a big school and very beautiful school.

It has water facilities, canteen, a play ground and a library. There are boys and girls in our school. So we get a good opportunity to learn to live together. Our school gives us a good education and provides us with a lot of activities. We enjoy playing netball and tennis together. When playing games we develop leadership qualities unity and companionship. And to perform our duties and fulfill responsibilities. I'm proud to be a student of Saboor Vidyalaya. I like my school very much.

S.L. Hajistha Begum
STR /Saboor Vidyalaya.
Grade-7
Sammanthurai.

Friendship



Friendship is the very cement of life which keeps individuals and nations together. A friend makes one's life livable and loveable. A person without friends is like a boat without a rudder.

As the saying goes, "a friend in need is a friend indeed", a true friend lends a hand in one's troubles and sorrows . We have many friends but not a single true friend . It is very difficult and very rare to find true friends. Having a true friend is like having a diamond in the coal mine of life. To have genuine friends, we should be genuine. So, from today, let's cultivate good qualities and be a true friend to others.

Fathima Rasha Nilam
Grade 9E
Hizbullah Central College
Kurunegala

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

I learn every day

A 61/5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான ஆலோசனைகள்

1. எப்போது, எந்தப் பாடத்தைப் படிக்க வேண்டும் என்று திட்டமிடுவது அவசியம். திட்டமிடும் போது பரீட்சை நேர அட்டவணையைக் கவனத்தில் எடுப்பது அவசியம்.

2. இடையிடையே நினைவுபடுத்தாமல், தொடர்ந்து வாசிப்பது அதிக பலன் தராது. இடையிடையே இதுவரை படித்தவற்றை நினைவுபடுத்த வேண்டும். நினைவுக்கு வராத விடயங்களை புத்தகத்தை அல்லது குறிப்புக் களைப் பார்த்து அறிந்து கொள்ள வேண்டும்.

3. ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் நேரத்தை சரியாக ஒதுக்க வேண்டும். உ+ம்: வரலாறு பெரிய வினாவுக்கு 30 நிமிடங்களை ஒதுக்க லாம். அதில் உள்ள iஆம் பிரிவுக்கு 2 நிமிடங் களையும் iiஆம் பிரிவுக்கு 3 நிமிடங்களையும் iiiஆம் பிரிவுக்கு 10 நிமிடங்களையும் (3 பந்தி கள்) ஒதுக்கலாம். இதன்படி சரியாக நேரத்தை செலவழித்தால் 3 மணித்தியாலங்களில் 6 வினாக்களையும் எழுதி முடிக்கலாம். இதே போல எல்லாக் கட்டங்களுக்கும் நேரத்தை சரியாகத் திட்டமிட வேண்டும்.

4. பரீட்சை தொடங்கும் நேரத்திற்கு 10 நிமிடங் களுக்கு முன்பு உங்களுக்குரிய இருக்கையில் மகிழ்ச்சியான மனநிலையுடன் இருத்தல் வேண்டும். பரபரப்பு எமது வெற்றியைப் பாதிக்கும். பரீட்சை எழுத முன்பு, வினாப் பத்திரத்தில் உள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்க வேண்டும். அவ்வாறு வாசிக்காமல் எழுதுவது, பரீட்சையின் வெற்றியைப் பாதிக் கும். உ+ம்: வரலாறு பகுதி iiஇல் பின்வருமாறு அறிவுறுத்தல் உள்ளது.

   பகுதி iஇல் உள்ள வினா கட்டாயமானது. பகுதி iiஇலிருந்து 3வினாக்களையும் பகுதி iiiஇலிருந்து 2 வினாக்களையும் தெரிந்து எல்லாமாக 6 வினாக்களுக்கு விடை தருக.

7. எல்லாவற்றையும் இரு தடவைகள் வாசித்த பின்பே, நாம் எழுத வேண்டிய வினாக்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

8. வினாவை எழுத முன்பு திட்டமிட வேண்டும். விடை எவ்வாறு அமைய வேண்டும் என்று திட்டமிட்டு எழுதினால் நாம் அதிக புள்ளி களைப் பெறலாம்.

   கடிகாரம் எம்மிடம் இருப்பது நல்லது. அடிக்கடி நேரத்தை அவதானிக்க வேண்டும். பரீட்சை நேரம் முடிவடைவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்பு எழுதுவதை நிறுத்திவிட்டு, எமது விடைத்தாள்களை ஒழுங்குபடுத்த வேண்டும். இவற்றை எழுதிய பின்பு தொடர்ந்து பரீட்சை எழுதலாம்.

10. சென்ற வருடம் வந்த வினாத்தாளை நன்கு அவதானிக்க வேண்டும். அதன் அடிப்படை யில் இம்முறை எவ்வாறு வினாக்கள் அமையும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

   (உ+ம்) 2011இல் இராஜரட்டை காலத்தில் (நீர்வள நாகரிகம்) பண்டுகாபயன், நீர்ப் பாசனம் ஆகியன வந்துள்ளன. இம்முறை ஏனைய அரசர்கள் பற்றியும் கலைகள் பற்றியும் வரலாம் என்று எதிர்பார்க்கலாம்.

   (உ+ம் ii) சென்ற வருடம் யாப்புகள் பற்றி பெரிய வினாக்கள் வரவில்லை. அதனால் இம்முறை அவை பற்றிய வினாக்கள் வரும் என்று எதிர்பார்க்கலாம்.

(20ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதியோருக்கு மரியாதை

ஒருநாள் ஒரு வழக்கமான சபையில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் அபூ பக்ர், உமர், இப்னு உமர், (ரழியல்லாஹு அன்ஹும்) அவர்களும் அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது நபியவர்கள் தமது தோழர்களிடம் விடுகதையைப் போன்று ஒரு வினாவைக் கேட்டார்கள்.

அது என்ன வினாவாக இருக்கும்? அது ஒரு மரத்தைப் பற்றியதாகும். நபியவர்கள் அம்மரத்தைப் பற்றி பின்வருமாறு வர்ணித்தார்கள்:

- இது ஒரு முஸ்லிமுக்கு உதாரணமாகும்.
- இது எமது ஏக இறைவனின் கட்டளைப்படி எல்லாக் காலங்களிலும் கனிகளைக் கொடுக்கும்.
- இதனது இலைகள் உதிர்வதுமில்லை.

அது என்ன மரம்? எனக் கேட்டார்கள். சபையில் இருந்த அபூபக்ர், உமர், இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹும்) ஆகிய மூவரும் அமைதியாக இருந்தனர். இருந்தபோதிலும் இச்சமயம் இப்னு உமருக்கு அந்த மரம் 'பேரீத்த மரம்' என மனதில் தோன்றியது. ஆனாலும் அவர் சபையில் முண்டியடித்துக் கொண்டு பதில் கூற முன்வரவில்லை. இறுதியில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களே 'பேரீத்தம் மரம்' எனப் பதிலளித்தார்கள்.

அதன் பின்னர் இச்சபை கலைந்து இம் மூவரும் எழுந்து வந்தனர். அவ்வேளை இப்னு உமர் தனது தந்தை உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம், "தந்தையே! நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இவ்வினாவைக் கேட்டதும் எனக்கு மனதில் பேரீத்த மரம் என்று தோன்றியது" என்றார். உடனே உமர் (ரழியல்லாஹு அன்ஹு), "விடை தெரிந்தும் ஏன் கூறவில்லை? உன்னை ஏன் தடுத்துக் கொண்டாய்?" என வினவினார். அதற்கு இப்னு உமர், "தந்தையே எனக்கு மூத்தவர்களான நீங்களும் அபூபக்ரும் பேசாமலல்லவா இருந்தீர்கள். உங்களை மீறி எவ்வாறு பதிலளிப்பது?" என்று தனது தந்தைக்குப் பணிந்தவராகக் கூறினார்.

(ஸஹீஹுல் புஹாரி, முஸ்லிம்)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"நம்மில் முதியவருக்கு மரியாதை செய்யாதவனும் சிறியவருக்கு இரக்கம் காட்டாதவனும் என் உம்மத்தைச் சார்ந்தவனல்ல."

(ஸுனன் அஹ்மத்)

ஏ.எல்.எப். லரீபா
அலகப்பெருமகம

அ/ ஹோறாபொள முஸ்லிம் வித்தியாலயத்தில் 5 தரம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்

எம்.ஏ.ஏ. ஹஸ்ஸான்
(145)

ஆர். ரஸீனா
(149)

எம்.எம். அப்லல்
(153)

கே.கே. பஸ்லியா
(158)

வை.எல். சிப்ரா
(184)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே.எம். அஸீம் (நளீமி) www.azeemzain.org

பரீட்சையை வெற்றி கொள்ளல்

நீங்கள் அனைவரும் தற்போது பரீட்சையை மிக அண்மித்திருப்பீர்கள். பரீட்சையில் மிகச் சிறந்த அடைவுகளைப் பெற்று இவ் ஆண்டிறுதிப் பரீட்சையில் வெற்றி கொள்ள வேண்டும் என்ற அவாவுடன் இருப்பீர்கள். முதலில் நீங்கள் பரீட்சையில் மிகச் சிறப்பாக சித்தியடைய வேண்டும் என உங்களுக்காகப் பிரார்த்திக்கிறேன்.

நீங்கள் பரீட்சையில் வெற்றி பெறுவது உங்களின் கைகளில்தான் உள்ளது. பரீட்சையில் வெற்றி பெறுவது என்பது பரீட்சையில் பெறும் புள்ளிகளையே குறிக்கும். நீங்கள் கற்றிருக்கும் விடயங்களையும் உங்கள் அறிவையும் பொறுத்தே, கிடைக்கப்பெறும் புள்ளிகள் தீர்மானிக்கப்படும். ஆனால், பரீட்சையை வெற்றி கொள்வது என்பது வேறு. அது நீங்கள் பரீட்சைக்குத் தயாராகும் முறையிலும் பரீட்சை எழுதும்போது கடைபிடிக்கும் நுட்பங்களிலும் தங்கியுள்ளது.

'பரீட்சையில் வெற்றி' கற்ற அளவை வைத்துத் தீர்மானிக்கப்படும். 'பரீட்சையை வெற்றி கொள்வது' கற்ற விடயங்களைக் கொண்டு எவ்வாறு வினாக்களுக்கேற்ப விடையளிக்கலாம் என்பதையும் புள்ளிகளை இலக்கு வைத்து முன்னேறுவதையும் குறிக்கும். சற்று விபரமாகவே பார்ப்போம்.

பொதுவாக நாம் பரீட்சையில் வெற்றி பெறுவதிலேயே குறியாய் இருப்போம். வழமை போலவே ஆசிரியர்கள் கற்றுத் தரும் விடயங்களைக் கற்பது, கடந்த கால வினாத்தாள்களை செய்து பார்ப்பது போன்ற விடயங்களில் கவனம் செலுத்தி மேலும் மேலும் கற்றதையே கற்று பரீட்சையில் எப்படியாவது சிறப்பாக சித்தியடைய முயல்வோம். இந்த விடயங்கள் நீங்கள் அறிந்ததே.

பரீட்சையை வெற்றி கொள்ள...

நீங்கள் எவ்வளவு கற்றுள்ளீர்கள் என்பதைவிட பரீட்சைக்குத் தயாராக உள்ளீர்களா என்பது மிக முக்கியம். உளரீதியாகவும் உடல்ரீதியாகவும் அறிவு ரீதியாகவும் பரீட்சைக்குத் தயாராக இருப்பது பரீட்சையை வெற்றி கொள்ள உதவும்.

பரீட்சை பற்றிய பயம் (Examophobia) நீங்கி, "நான் பரீட்சையில் சித்தி அடைவேன்" என்ற நம்பிக்கை உளரீதியாக உங்களிடத்தில் வர வேண்டும். உளரீதியாக இத்தகைய தயார்படுத்தல் நீங்கள் நம்பிக்கையுடன் பரீட்சையை எதிர்கொள்வதற்கான நம்பிக்கையைத் தரும்.

ஆரோக்கியமான உணவுப் பழக்கங்கள், உடலுக்கு ஆரோக்கியமான செயற்பாடுகள் மூலம் உடல்நிலையை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளுங்கள். பரீட்சைக்கு சிறப்பாகத் தயாராவதற்கும் பரீட்சைக் களத்தில் நின்று சிறப்பாக பரீட்சை எழுதவும் உங்கள் ஆரோக்கியமான உடல்நிலைதான் துணைபுரியும்.

அறிவுரீதியாக தயாராவது என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பரீட்சைக்காக கற்பதைக் குறிக்கும். ஆண்டு முழுவதும் உங்கள் அறிவு விருத்தியடைவதற்காகக் கற்ற நீங்கள், பரீட்சை நெருங்குகின்றபோது பரீட்சைக்காக கற்கப் பழகுங்கள். பல்தேர்வு வினாக்களில் நான்கில் சரியானதைத் தெரிவு செய்வதற்கும் பரீட்சையின் போது வினவப்படும் வினாக்களில் தெரிந்ததை மட்டுமன்றி தெரியாததையும் தெரிந்த மாதிரி எழுதுவதற்கும் கற்றுக் கொள்ளுங்கள்.

1. பரீட்சை பற்றிய யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளுங்கள்

பரீட்சை என்பது ஒரு வருடமோ அதற்கு மேற்பட்ட காலப்பகுதியையோ உள்ளடக்கிய பாடத்திட்டத்தில், எதிர்பார்த்த இலக்குகளை நீங்கள் அடைந்துள்ளீர்களா என்பதைப் பரீட்சிப்பதே ஆகும். அது உண்மையாகவே உங்கள் அறிவை அளவிடும் அளவுகோல் இல்லாவிட்டாலும், உங்கள் பாடத்திட்டத்தில் குறிப்பிட்ட இலக்குகளை அடைந்து, எதிர்பார்த்தளவு அறிவு விருத்தியடைந்துள்ளதா, அதனை உங்களுக்கு வெளிப்படுத்த முடியுமா என்பதை அளவிடுவதற்கான அளவுகோல் என்பதையும் மறந்து விடாதீர்கள்.

2. கால வரையறை (Time Specific)

எதிர்பார்த்த இலக்குகளை கேட்கப்படும் முறைகளில் மாத்திரமன்றி குறிப்பிட்ட கால அளவில் உங்களால் வெளிப்படுத்த முடியுமா என்பதையும் சேர்த்தே பரீட்சிக்கப்படுகிறது. அனைத்து விடயங்களையும் நீங்கள் அறிந்திருந்தாலும் குறிப்பிட்ட காலத்திற்குள் அவற்றை வெளிப்படுத்தத் தவறுகின்றபோது புள்ளிகளைப் பெறத் தவறி விடுவீர்கள். இது பரீட்சைத் தோல்வியாகக் கருதப்படும். நீங்கள் நன்றாகக் கற்ற விடயம் குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் உங்களுக்கு ஞாபகத்திற்கு வராவிட்டாலும் அதுவும் புள்ளிகளை இழக்கக் காரணமாகிவிடும். இவையெல்லாம் நீங்கள் அனுபவித்த விடயங்களாக இருக்கலாம். ஆனால், அவற்றை அறிந்தும் அனுபவித்தும்கூட நீங்கள் இத்தகைய யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு உங்கள் அனுபவம் எனும் பேராசானிடம் கற்கத் தவறிவிடுகிறீர்கள்.

3. பரீட்சை எழுதும்போது பரீட்சை நுணுக்கங்களைக் கையாளுங்கள்

பரீட்சை நுணுக்கங்களே பரீட்சை வெற்றிக்கான சிறந்த சாதனங்கள். பல்தேர்வு வினாக்களுக்கு விடையளிப்பதில் நீங்கள் குழம்பிக் கொள்ளாமல் ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டு நன்றாக ஞாபகத்தில் பதிந்து கற்றுக் கொள்ளுங்கள். கட்டுரை வினாக்களுக்கு விடையளிக்கும்போது குறிப்பிட்ட விடயத்தை நன்றாக விளங்கி உங்கள் மொழிநடையில் விடை எழுதுங்கள். விடைகளை பெரிய பந்திகளாக அமைத்து திருத்துபவரை குழப்பத்திற்கு உள்ளாக்கி விடாதீர்கள். முக்கியமான விடயங்களை தெளிவாக விளங்கும்படி தலைப்பிட்டு பந்தி பிரித்து தெளிவாக எழுதுங்கள். இது விடைத்தாள்களைத் திருத்துபவர் நல்ல மனோநிலையில் உங்களுக்குப் புள்ளிகளை வழங்க உதவும். உங்கள் பரீட்சை விடைத்தாளைத் திருத்துபவர் எரிச்சலடையாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டியவற்றை சுருக்கமாகவும் விரிவாகச் சொல்ல வேண்டியவற்றை விளக்கமாகவும் எழுதுங்கள். உங்களால் முடிந்தளவு உங்கள் கையெழுத்தை தெளிவாக எழுதுங்கள். விடைத்தாளைத் திருத்துபவர் உங்களுக்கு வினாவுக்கான விடை தெரியும் என்பதை அறிந்து கொள்ளும் வகையில் விடைகளை அமைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு விடை தெரியும் என்பதாக அவர் வழங்கும் புள்ளிகளே நீங்கள் சிறந்த முறையில் பரீட்சையை வெற்றி பெற உதவும்.

சாதாரணமாக ஒருவரின் உடையைப் பார்த்து இவர் கற்றவர் எனவும் இவர் கற்றறிந்தவரல்ல எனவும் பலர் மனக்கணக்குப் போடுவதை கண்டிருப்பீர்கள். அதுபோலத்தான் பரீட்சைக்கும். நீங்கள் அளிக்கும் விடையைப் பொறுத்தே உங்களுக்கு குறிப்பிட்ட விடயம் தெரியும் அல்லது தெரியாது என்பது தீர்மானிக்கப்படும். எனவே, அனைத்து வினாக்களுக்கும் விடை தெரிந்தவர் போன்றே விடை அளியுங்கள். உங்களுக்கு சரியான விடை தெரியாது என்பதை அப்பாவித்தனமாக பரீட்சை விடைத்தாளில் காட்டிக் கொடுத்து விடாதீர்கள்.

கேட்கப்பட்டுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளித்துள்ளீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். வினாக்களின் இலக்கங்கள், உப வினாக்களின் இலக்கங்கள் மிகத் தெளிவாக, பார்த்தவுடன் விளங்கும் விதமாக சற்றுப் பெரிதாக இடைவெளிவிட்டு தெளிவாக எழுதிக் கொள்ளுங்கள். அனைத்துக் கேள்விகளுக்கும் விடையளித்துள்ளீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். மேலதிக வினாக்களுக்கு வீணாக விடையளித்து நேரத்தை வீணாக்கிவிடாதீர்கள்.

உங்களுக்கு என்று ஒதுக்கித் தரப்பட்ட பரீட்சை கால அவகாசத்தை கனகச்சிதமாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். முடியுமானவரை விரைவாக விடை எழுதுங்கள். முக்கிய விடயங்களை முற்படுத்தி எழுதுங்கள். விடைகளை மாத்திரம் எழுதுங்கள். குறிப்பிட்ட நேரத்திற்குள் அனைத்திற்கும் விடையளித்துவிட்டால் மீண்டும் உங்களுக்குத் தெரிந்த விடயங்களையும் இடமிருந்தால் சேர்த்துக் கொள்ளுங்கள் அல்லது விடைகளை சரிபார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் சுட்டிலக்கம், பக்க இலக்கம், வினா இலக்கம் என்பன ஒழுங்காக எழுதப்பட்டுள்ளதா என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளுங்கள்.

4. அனுமானித்துக் கொள்ளுங்கள்

என்ன என்ன வினாக்கள் வரும் என்று ஊகித்துக் கொள்ளுங்கள். ஆனால் அவற்றில் மாத்திரம் தங்கியிருக்காதீர்கள். அவற்றை சிறப்பாகக் கற்றுக் கொள்ளுங்கள். என்றாலும் சிலபோது அவை வினவப்படாவிட்டாலும் ஏனைய வினாக்களுக்கு விடையளிக்கக்கூடியதாக உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள்.

5. உங்கள் மூளையை தயார்படுத்திக் கொள்ளுங்கள்; பயன்படுத்தி வெல்லுங்கள்

என்ன என்ன பகுதிகளிலிருந்து என்ன விடயத்தை எப்படிக் கேட்பார்கள் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். அவற்றிற்கு எப்படி விடையளிக்கலாம் என்பதை சிந்தித்துப் பாருங்கள். இப்படி நீங்கள் உங்கள் மூளைக்குப் பயிற்சி அளிப்பது பரீட்சைக் களத்தில் உங்கள் மூளை சிறப்பாக செயற்பட உதவும்.

6. உங்கள் உடல் நிலையை தயார் படுத்திக் கொள்ளுங்கள்

பரீட்சைக்குத் தயாராகும்போதே வினாக்களுக்கு விடை எழுதி அதனை உரியவர்களிடம் காட்டி திருத்திப் பழகுங்கள். பரீட்சையில் நீங்கள் எழுத்துக்களால்தான் பதிலளிக்க வேண்டும். எனவே, கேட்கின்ற வினாக்களுக்கு விடை எழுதிப் பழகும்போதுதான் பரீட்சைக் களத்தில் சிறந்த முறையில் விடையளிக்க முடியும். அதற்காக உங்கள் கைகளுக்கும் மனதை ஒருமுகப்படுத்திக் கொள்வதற்கும் பயிற்சியளித்து தயார்படுத்திக் கொள்ளுங்கள்.

சில்லுகளின் மீது... (30ஆம் பக்கத் தொடர்)

1980ஆகும்போது உலக மோட்டார் சைக்கிள் உற்பத்தியில் 60%ஐ ஹொண்டாவே உற்பத்தி செய்தது. 1973இல் ஓய்வு பெறும் வரை அந்நிறுவனத்தின் தலைவராக ஹொண்டா பணியாற்றினார்.

இன்று ஹொண்டா நிறுவனம் மோட்டார் சைக்கிள் கார் உட்பட பல வகையான உற்பத்திகளை உலகிற்கு வழங்கும் முன்னணி நிறுவனமாகவுள்ளது. இன்று அந்நிறுவனம் ஜெட் (Jet) விமானங்களையும் உற்பத்தி செய்கிறது. 2012ஆகும்போது ஹொண்டா நிறுவனத்தில் 179,060 பேர் பணிபுரிந்தனர். 1991இல் தனது 84 வயதில் இவ்வுலகை விட்டுப் பிரியும்போது தனது கனவை நிறைவேற்றி உலகின் மிகக் கீர்த்தி மிக்க நிறுவனமாக ஹொண்டா நிறுவனத்தை அவர் மாற்றியிருந்தார்.

வரலாறு...(18ஆம் பக்கத் தொடர்)

(உ+ம் iii) சென்ற வருடம் ஜப்பான் பற்றிய வினா வந்தது. அதனால் இம்முறை இந்தியா அல்லது சீனா பற்றி வரலாம். மகாத்மா காந்தி, மா ஓ சேதுங் பற்றி அதிகமான தகவல்களை தேடிக் கொள்ள வேண்டும். இவ்வாறு பல வினாக்களை தயாரிக்க வேண்டும்.

11. ஒரு வினாவை எழுதத் தொடங்கும் போது அதற்கான உச்ச புள்ளியைப் பெறும் வண்ணம் நாம் எழுத வேண்டும்.

12. வரலாறு பாடத்திற்கு நாம் சுமார் 25 பந்திகள் எழுத வேண்டும். ஒவ்வொரு பந்தியும் 10 வரிகளுக்கு மேற்பட்டதாகவும் சிறிய வசனங்களைக் கொண்டதாகவும் போதுமான தகவல்களைக் கொண்டதாகவும் அமைதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநாடுகள்

15வது ஆளுநர் மாநாடு



15வது ஆளுநர் மாநாடு 2012 நவம்பரில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இம் மாநாடு வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது.

ஆளுநர் என்பவர் ஜனாதிபதி சார்பாக ஒவ்வொரு மாகாணத்திலும் காணப்படும் அதிகாரி ஆவார்.

ஆளுநர் மாநாட்டின் முக்கிய நோக்கங்களாவன:

தத்தமது மாகாணங்களில் இடம்பெற்ற முன்னேற்றங்கள் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல்.

சில விடயங்கள் தொடர்பாக ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுதலும் அவற்றில் பொதுவான இணக்கப்பாட்டை எய்தலும்.

மாகாணங்களும் அவற்றின் ஆளுநர்களும்

மாகாணங்கள்	ஆளுநர்கள்
வட மாகாணம்	ஜி.ஏ. சந்திரசிறி
கிழக்கு மாகாணம்	மொஹான் விஜயவிக்கிரம
மேல் மாகாணம்	அலவி மௌலானா
ஊவா மாகாணம்	சி. நந்தன மத்தியூ
வடமத்திய மாகாணம்	கருணாரட்ன திபுல்கனே
மத்திய மாகாணம்	டிக்கிரி கொப்பேகடுவ
தென் மாகாணம்	குமாரி பாலசூரிய
வடமேல் மாகாணம்	திஸ்ஸ.எஸ். பலல்ல
சப்ரகமுவ மாகாணம்	டபிள்யூ.ஜே.எம். லொகு பண்டார

விளையாட்டு

டெனிஸ் ஆடவர் ஒற்றையர் விருது 2012

டெனிஸ் ஆடவர் ஒற்றைப் பிரிவில் 2012ஆம் ஆண்டிற்கான மக்கள் விருப்ப வீரருக்கான விருதினை சுவிற்சர்லாந்தின் ரொஜர் பெடரர் வென்றார்.

World Today

திரு. பீ. உமா சங்கர்,
B.Com (Jaf), M.Com (Kelaniya) (R) Spl.Trd.Com,
NDBF, Sri Lanka Technical College - Colombo

சர்வதேச நீரிழிவு தினம்



சர்வதேச நீரிழிவு தினம் வருடாந்தம் நவம்பர் 14இல் அனுஷ்டிக்கப்படுகிறது.

2012ஆம் ஆண்டுக்கான உலக நீரிழிவு தின தொனிப்பொருள் 'எமது எதிர்காலத்தைப் பாதுகாப்போம்' என்பதாகும்.

தற்போது உலகளாவிய ரீதியில் 366 மில்லியன் நீரிழிவு நோயாளர்கள் உள்ளதாகவும் 2030ஆம் ஆண்டளவில் இது 552 மில்லியனாக அதிகரிக்கும் எனவும் எதிர்வு கூறப்படுகிறது.

இலங்கையில் 20 வயதிற்கு மேற்பட்டோரிடையே ஐந்து பேருக்கு ஒருவர் என்ற அளவில் நீரிழிவு நோயாளர்கள் காணப்படுகின்றனர்.

நீரிழிவு கல்வியும் பாதுகாப்பும் ஆண்டாக 2009-2013 காலப்பகுதி பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச தினம்

சர்வதேச மலாலா தினம்

பாகிஸ்தானைச் சேர்ந்த மலாலா, தீவிரவாதிகளால் சுடப்பட்டு உயிர்பிழைத்ததை நினைவு கூரும் முகமாக ஒவ்வொரு வருடமும் நவம்பர் 10 ஆம் திகதி சர்வதேச மலாலா தினம் கொண்டாடப்படுகிறது.

கல்வி கற்க ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் உரிமை உள்ளது என பெண் கல்விக்கு ஆதரவாக செயற்பட்ட மலாலா தீவிரவாதிகளால் சுட்டு உயிர்பிழைத்தமை குறிப்பிடத்தக்கது.

அரசியல் மாற்றங்கள்

சீனாவின் புதிய ஜனாதிபதி

சீனாவின் புதிய ஜனாதிபதியாக பொதுவுடமை கட்சியின் புதிய செயலாளர் ஸி ஜின்பிங் (Xi Jinping) 2012 நவம்பரில் தெரிவானார்.

இவரது பதவியேற்பு அடுத்த வருட ஆரம்பத்திலேயே நடைபெறவுள்ளது.

மத்திய இராணுவ ஆணையகத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட இவர், சீன சிவில் யுத்தத்தின்போது மா வோ சேதுங் உடன் இணைந்து போராடிய முன்னாள் பிரதமர் ஸி ஸொங் ஸுன்னின் மகனாவார்.

1953ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி பிறந்த இவர் இரசாயன பொறியியலிலும் அரசியல் விஞ்ஞானத்திலும் கலாநிதிப் பட்டம் பெற்றவராவார்.



அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி

அமெரிக்காவின் ஜனாதிபதி தேர்தல் நவம்பர் மாதம் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதியும் ஜனநாயக கட்சி வேட்பாளருமான பராக் ஒபாமாவும் குடியரசுக் கட்சி வேட்பாளர் மிட் ரொம்னியும் போட்டியிட்டனர்.

இத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ஆகக் குறைந்தது 270 வாக்குகளை பெற வேண்டிய நிலையில் பராக் ஒபாமா 303 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றதுடன், மிட் ரொம்னி 206 வாக்குகளைப் பெற்று 2ஆம் நிலையை அடைந்தார்.

அமெரிக்காவின் 50 மாநிலங்களில் 26 மாநிலங்களை பராக் ஒபாமாவும் 24 மாநிலங்களை மிட் ரொம்னியும் வெற்றி கொண்டனர்.

தற்போதைய புதிய தலைவர்கள்

புதிய பிரதமர்
லி கெகியாங்

உப பிரதமர்
ஸாங் டெஜியாங்

உலகில் இரண்டாவது மிகப் பெரிய பொருளாதார நாடாக மாறுவதற்கு வழிவகுத்த முன்னாள் ஜனாதிபதி ஹூ ஜிந்தாவோவின் பத்து வருட ஆட்சிக்காலத்தை இப்புதிய நியமனம் முடிவுக்கு கொண்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியும் இலக்கியமும்

ஆசிரியர்: நுஸ்ரா நிசாம்தீன் BA (Hons) PGDE

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

சென்ற இதழ் தொடர்...

வினாத் தொகுப்பு 06

01. 'நாள்தொறும் நாடிமுறை செய்யா மன்னவன் நாள் தொறும் நாடு கெடும்'

அ) இக்குறட்பா எதைப் பற்றி கூறுகிறது?

ஆ) இதன் கருத்தை எழுதுக.

02. 'நல்லாய் வரும் பிள்ளை...' என்று தொடங்கும் முதுமொழி வெண்பாவில் இடம்பெறும் பழமொழியைத் தருக.

03. "ஆற்றிலேயள்ளுண்டு போனாக்காற்சிறு நண்டுமதட்டிப்பார்க்கும்..." இதனை சந்தி பிரித்தெழுதுக.

04. 'ஒங்க அத்திம்பேருக்கு வாக்கப்பட்டு நான் என்ன சுகத்தக் கண்டேன்' இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

05. "துக்கத்தில் தலையெடுக்கும் தைரியம்போல தொலை இருளில் அந்த ஒளித்தொடர் விரைந்து சென்று கொண்டிருந்தது."

அ) ஒளித்தொடர் என்று குறிக்கப்படுவது யாது?

ஆ) அது எங்கிருந்து எங்கே விரைகிறது?

06. மங்கையர்க்கரசியின் தந்தை யார்? அவரது சிறப்பு ஒன்று தருக.

07. நட்சத்திரக் குழந்தைகள் என்ற சிறுகதையில் வந்துள்ள குழந்தையின் பெயர் என்ன? இக் கதையாசிரியர் நடத்திய பத்திரிகையின் பெயர் என்ன?

08. அ) "ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல்" என்ற பழமொழி எதனை விளக்கக் கூறப்பட்டுள்ளது?

ஆ) இப்பழமொழியை விளக்க கையாண்டுள்ள உவமை யாது?

பரீட்சை வழிகாட்டல் வினா - பகுதி II

வினா: கல்வியே அழியாச் செல்வம் எனும் கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு கல்வி பற்றிய வள்ளுவரின் கருத்துக்களைக் குறிப்பிட்டு விளக்குக.

விடை: மறைமலை அடிகளார் கல்வி பற்றிய தனது கட்டுரையில் கல்வி பற்றிய திருவள்ளுவரது அரிய கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டியுள்ளார். அதனை நோக்குவோமாயின், வள்ளுவர் மக்களுக்கு கல்வி அறிவு தொடர்பாக பல்வேறு ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் சுவைபடத் தந்துள்ளார் என்பது புலனாகும்.

வள்ளுவர்,

"கேடில் விழுச்செல்வம் கல்வியொருவருக்கு
மாடல்ல மற்றுபிற"

என்று ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்விச் செல்வமே எனவும் வேறு பொருட்கள் ஒருவனுக்கு சிறப்புடையதாக ஆக மாட்டாது எனவும் குறிப்பிடுகிறார்.

ஒரு மனிதன் மாடமாளிகைகளில் வாழ்ந்தாலும் அது அவனுக்கு எத்தகைய பயனும் அளிக்காது. உலகில் அனைத்து செல்வங்களும் காலத்தால் அழிந்துவிடும், கள்வர்களால் களவாடப்படும், கொடுத்தால் குறையக்கூடியது. தீ, வெள்ளம் முதலிய இயற்கை அனர்த்தங்களால் அழிந்துவிடும். ஆனால், 'கல்வியே அழியாச் செல்வம்.' எத்தகைய அழிவுக்கும் உட்படாத சிறப்புக்குரியதென்றவாறு வள்ளுவர் இயம்புகிறார்.

மேலும், "விலங்கொடு மக்கள் அனையர்..." என்று தொடரும் குறளிலும் "கல்லாதவன் ஒட்பங் கழிய..." என்று தொடரும் குறளிலும் வள்ளுவர் சிறந்த கருத்துக்களை எடுத்துரைப்பதாக அறிய முடிகிறது.

மக்கள் அறிவு வளர்ச்சியை உடையவர்கள். விலங்குகள் அறிவு வளர்ச்சி அற்றன. மக்கள் மக்களாக வாழவேண்டுமாயின் அறிவு வளர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். அப்படி இல்லை என்றால், கல்லாதவரை அறிவு வளர்ச்சியற்ற விலங்கோடு வைத்து எண்ண வேண்டும். நூலறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனை மனிதனாக்கும். அறிவு, ஒளி, நூல் அறிவினால் உண்டாகும் என்றவாறு பல சிறந்த கருத்துக்களை வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

மற்றொரு குறளில்,

"கண்ணுடையோர் என்பவர் கற்றோர்
முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்"

என்று வள்ளுவர் கூறுவது வள்ளுவரது கல்வி பற்றிய நோக்கை புலப்படுத்தி நிற்கின்றதெனலாம்.

கண்ணைப் பெற்றிருந்தும் கல்வி அறிவு இல்லாதவர் கண்ணில்லாதவர் ஆவார் என்பது அவர்தம் கருத்தாகும். கண்ணிருந்தும், கல்வியறி வில்லாதவர் முகத்தில் புண்ணுடையவராக வள்ளுவர் உவமை மூலம் காட்டுவது நயத்தற் குரியது.

இவ்வாறாக 'கல்வியே அழியாச் செல்வம்' எனும் கட்டுரையில் மறைமலை அடிகளார், திருவள்ளுவரது பல கருத்துக்களை இயம்பியுள் ளார். குறிப்பாக, கற்றவர் சிறப்பு, கல்வியின் தேவை, கற்காதவர் நிலை, கல்வி வளர்தலின் கடமை போன்ற இன்னோரன்ன விடயங்களை எடுத்துக் காட்ட முடிகிறது.

சென்ற இதழ் வினாக்களுக்கான விடைகள் இதோ! - பகுதி iii

வினாத் தொகுப்பு: 01

01. அ) பயனில் நீங்கிய சொற்களை மயக்கத்தில் நீங்கிய தூய அறிவுடையார் மறந்தும் சொல்ல மாட்டார்கள்.

ஆ) குற்றம்

02. 'கவிச் சக்கரவர்த்தி' நாடகம், எழுதியர் -கு. அழகிரி சாமி

03. பதினொரு ஈழத்துக் கவிஞர்கள், வ.ஐ.ச. ஜெயபாலன்

04. அ) குஞ்சம்மாளால், தம்பிக்குக் கூறப்பட்டது.

ஆ) தந்தி 'சிவராமையர் டேஞ்ஜரஸ்' என வர கவலையுற்ற அக்காவை ஆறுதல்படுத்தும் நோக்கில் அத்திம்பேரே அவளை ஊருக்கு வரவைப்பதற்காக இத்தந்தியை அடித்திருக் கலாம் எனத் தம்பி கூறும் சந்தர்ப்பம்.

05. முத்தொள்ளாயிரம் சேர, சோழப் பாண்டியர் பற்றி பாடப்பட்டுள்ளது.

06. கு.பா.ரா பணியாற்றிய பத்திரிகைகள்

i. மணிக்கொடி ii. கிராம ஊழியன்

07. பசி வந்திட பறந்து போகும் 10 குணங்கள்

1.	மானம்	6.	கொடை
2.	குலம்	7.	தவம்
3.	கல்வி	8.	உயர்வு
4.	வாய்மை	9.	தொழில் முயற்சி
5.	அறிவுடைமை	10.	மங்கையர்மேல் ஆசை

(விரும்பிய ஐந்தை எழுதுக)

08. வ.வே.சு. ஐயரின் படைப்புகளில் ஒன்று 'மங்யைர்க்கரசியின் காதல்' என்பதாகும்.

வ.வே.சு. ஐயர் - வரகநேரி வேங்கட சுப்ரமணி ஐயர்.

09. 'நான் மணிக்கடிகை' இதனைப் பாடியவர் 'விளம்பிநாகனார்'

10 'தேன் பெருக்குப் போலத் தோன்றுகின்ற சொல்லையுடைய மங்கையர் மேல் ஆசை வைத்தல்'

(தொடரும்...)

(ஹதீஸ் பூங்கா... 26ஆம் பக்கம் பார்க்க...)

"தீனார், திர்ஹம் மற்றும் ஆடை அணிகலன்களின் அடிமை நாசமாகட்டும். அவன் கிடைத்தால் திருப்திய டைவான்; கிடைக்காவிட்டால் கோபப்படுவான்."

(அல்புகாரி)

அதிகமாக தன்னை அலங்கரித்து எடுப்பாக நடக்க விரும்புபவர்கள் ஆடை அணிகலன்களுக்கு அடிமைப்படுவதுடன் அவர்களது உள்ளத்தில் தானாகவே பெருமையும் குடிகொண்டு விடுகிறது.

ஆகவே, மாணவர்களாகிய நாம் எப்போதும் இஸ்லாத்தின் வரையறைகளைப் பேணி எம்மை அழகுபடுத்திக் கொள்வதில் கரிசனையுடன் இருக்க வேண்டும். இவ்வாறு அழகிய தோற்றத் துடன் எப்போதும் இருப்பது எமது ஆளுமையின் அடையாளத்தையும் சிறந்த எதிர்காலத்தையும் வெளிக்கொணர்வதுடன் நபியவர்களின் சுன்னா வைப் பின்பற்றிய நன்மையைப் பெற்றுத்தரவும் போதுமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்கள் கற்றல் வழிமுறையை (Learning Style) கண்டறியுங்கள்

ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)

இலங்கையிலுள்ள சுமார் 50 பாடசாலைகளைச் சேர்ந்த 1000 மாணவர்களிடம் கற்றலில் நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்னவென்று கேட்கப்பட்டபோது அவர்களுள் 90வீதமானவர்கள் அளித்த பதில் என்னவென்று தெரியுமா? 'ஞாபக மறதி'. இக்கட்டுரையை வாசித்துக் கொண்டிருக்கின்ற உங்களிடமும் பெரும்பாலும் இவ்வாறானதொரு பதில்தான் காணப்பட வாய்ப்பிருக்கிறது. பல மாணவர்கள் ஞாபக மறதி என்ற விடயத்தோடு படிக்கின்ற விடயங்கள் தலைக்கு ஏறுதில்லை, படிப்பதில் ஆர்வம் வருவதில்லை, படிக்கும்போது தூக்கம்-களைப்பு வருகிறது போன்ற முறைப்பாடுகளையும் சொல்கின்றனர். இதற்குப் பல காரணங்கள் காணப்படுகின்றன. இக்கட்டுரையில் ஒரு மாணவன் ஆர்வத்தோடு படிப்பதற்கும் படிக்கின்ற விடயங்களை அதிகமாக ஞாபகத்தில் வைத்துக்கொள்வதற்கும் உதவுகின்ற முக்கியமான ஒரு விடயத்தை நோக்குவோம். அதுதான் நீங்கள் கற்கின்ற பாணி அல்லது கற்றல் வழிமுறை (Learning Styles)

ஞாபக மறதி என்பது எம்மிடம் காணப்படக்கூடாத விடயமல்ல; அது அல்லாஹ்வின் அருளாகும். இருப்பினும் தேவையான விடயங்கள் தேவையான நேரத்திற்கு ஞாபகத்திற்கு வருவதில்லை அல்லது தேவையான விடயங்களை ஞாபகத்தில் பதிந்து வைத்திருக்க முடிவதில்லை என்பது ஒரு சிக்கலே. எனினும் இது தீர்க்கப்பட முடியுமான ஒரு பிரச்சினையே. ஞாபகம் என்றால் என்ன, ஞாபகம் எவ்வாறு உருவாகிறது, ஞாபக சக்தியை மேம்படுத்த என்ன செய்ய வேண்டும், மறதி என்றால் என்ன போன்ற விடயங்களை முன்னைய இதழ்களில் உங்களுடன் நாம் பகிர்ந்திருந்தோம்.



Learning Styles

வித்தியாசமான கற்றல் வழிமுறைகளை அல்லது நீங்கள் கற்கின்ற பாணிகளை இது குறிக்கிறது. மாணவனுக்கு மாணவன் கற்கும் விதம் வேறுபட்டதாக அமையலாம். தான் கற்கும் விதம், வழிமுறை, அணுகுமுறை அல்லது பாணி என்ன என்பதை ஒரு மாணவன் அறிந்து அதற்கேற்றவாறு கற்கின்றபோது அம்மாணவனுக்கு படிப்பதில் ஆர்வம் ஏற்பட்டு படிக்கின்ற விடயங்கள் அதிகமாக ஞாபகத்திலும் பதிகிறது. கற்கின்ற விதத்தைப் பொறுத்து பொதுவாக எல்லா மாணவர்களையும் மூன்று வகையினராகப் பிரிக்கலாம்.

1. கேட்டல் மூலம் கற்பவர்கள் - Auditory Learners
2. காட்சி, பார்த்தல் மூலம் கற்பவர்கள் - Visual Learners
3. தசை இயக்கத்தின் மூலம் அல்லது தொட்டுணர்வதன் மூலம் கற்பவர்கள் - Kinesthetic / Tactile Learners

1. கேட்டல் மூலம் கற்பவர்கள் - Auditory Learners

மாணவர்கள் விரிவுரைகள், கலந்துரையாடல்கள், பொருட்களைப் பற்றிப் பேசுதல் மற்றும் அடுத்தவர்கள் பேசுவதைச் செவிமடுத்தல் போன்றவற்றினூடாக மிகச் சிறந்த முறையில் கற்றுக் கொள்கின்றனர். ஒரு விரிவுரையில் அல்லது கலந்துரையாடலில் பொதிந்துள்ள கருத்துக்களையும் உள்ளார்ந்த அர்த்தங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரலின் தொனி, சுருதி, பேசுகின்ற வேகம் போன்ற மிக நுணுக்கமான அம்சங்களைச் செவிமடுப்பதனூடாக விளங்கக்கூடியவர்களாகவும் வியாக்கியானம் செய்யக் கூடியவர்களாகவும் இருப்பர்.

இத்தகைய வழிமுறை மூலம் கற்கின்ற மாணவர்கள் எழுதப்பட்டிருக்கின்ற விடயங்களை ஒலி வடிவில் காதில் கேட்கும் வரை அதில் சொல்லப்பட்டுள்ள விடயங்களை சொற்பமாகவே விளங்கிக் கொள்வர். பந்திகளை சப்தமிட்டு வாசிப்பதன் மூலமும் ஒலிப்பதிவுக் கருவிகளில் (Voice recorder) பதிந்து அவற்றைச் செவிமடுப்பதன் மூலமும் அதிக நன்மைகளைப் பெற்றுக் கொள்வர்.

2. காட்சி, பார்த்தல் மூலம் கற்பவர்கள் - Visual Learners



பொருட்களையும் விடயங்களையும் தங்களுடைய கண்களால் காண்பதன் மூலம் இவர்கள் அதிகமாகக் கற்றுக் கொள்கின்றனர். உதாரணமாக, குருதிச் சுற்றோட்டத் தொகுதியை ஒரு ஆசிரியர் வெறுமனே வாய் மூலமாக ஒரு மணித்தியாலத்திற்கு விளக்குவதிலும் பார்க்க குருதிச் சுற்றோட்டத் தொகுதியை ஒரு படத்தில் காட்டி 10 நிமிடங்களில் விளக்கினால் அதிகம் விளங்கிக் கொள்ளக்கூடியவர்களாக இருப்பர். குறிப்பிட்ட பாடத்தை முழுமையாக விளங்கிக் கொள்ள ஆசிரியரின் உடல்மொழி (Body Language) அதாவது கை, கால், உடல் அசைவுகள், வெளிப்படுத்தும் உணர்ச்சிகள் மற்றும் முகக் குறிப்புகள், முக பாவனை கள் (Facial Expressions) என்பவற்றைப் பார்ப்பது அவசியமாகும்.

இவர்கள் எப்போதும் வகுப்பறையின் முன்வரிசையிலும் ஆசிரியருக்கு அண்மித்தும் இருக்க ஆசைப் படுவார்கள். அடுத்த மாணவர்களின் தலை மற்றும் அதுபோன்ற அம்சங்கள் தமது பார்வைக்கு இடைஞ்சலாக அமைவதைத் தவிர்க்கவே இவ்வாறு நடந்து கொள்வர். இவர்கள் படங்களிலுள்ள விடயங்கள் பற்றி அதிகம் சிந்திப்பவர்களாகவும் வரைபடங்கள் (Diagrams) வர்ணங்கள் மற்றும் காட்சிப்படங்களைக் கொண்ட பாடப்புத்தகங்கள், வீடியோக் காட்சிகள், கையேடுகள் போன்ற காட்சிப்படுத்தல்கள் போன்றவற்றிலிருந்து அதிசிறந்த முறையில் கற்றுக் கொள் கின்றனர்.

வகுப்பறையில் நடைபெறும் உரை மற்றும் வகுப்பறைக் கலந்துரையாடல்களிலிருந்து அதிகமான தகவல்களை உள்வாங்கிக் கொள்ள, விரிவான விளக்கக் குறிப்புகளை எழுதிக் கொள்வதற்கு விரும்புவர்.

3. தசை இயக்கத்தின மூலம் (செய்து பார்த்தல்) அல்லது தொட்டுணர்வதன் மூலம் கற்பவர்கள் Kinesthetic / Tactile Learners

இத்தகைய மாணவர்கள் இயற்கையில் எதையும் செய்து பார்க்கக்கூடியவர்கள் (Natural Doers). அசைதல், செய்தல், தொட்டுணர்தல் முலம் கற்றுக் கொள்கின்றனர். விடயங்களை செய்து பார்ப்பதனூடாக பல விடயங்களை கண்டு பிடிப்பதன் மூலமும் வெளிக் கொணர்வதன் மூலமும் சிறந்த முறையில் கற்றுக்கொள்கின்றனர். கட்டாய பாரம்பரிய வகுப்பறைக் கற்றலுக்குப் பொருத்தமற்றவர்கள். உலகில் உள்ள சனத்தொகையில் 5வீதமானவர்கள் இவ்வாறானவர்கள் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

உடலியல்ரீதியாக செயற்படும்போது அல்லது செயல்ரீதியாக ஒன்றில் ஈடுபடும் போது சிறப்பாகவும் அதிகமாகக் கற்றுக் கொள்கின்றனர்.

உதாரணமாக ஒளித் தொகுப்புக்கு சூரிய ஒளி அவசியம் என்பதை கோட்பாடு ரீதியாகவோ, காட்சிப்படுத்தலின் மூலமோ விளங்கப்படுத்தும்போது அறிந்து கொள்வதை விட அதற்கான பரிசோதனைகளை ஆய்வு கூடத்தில் செய்து பார்ப்பதன் மூலம் அதிகமாக விளங்கிக் கொள்வர்.

செயற்பாடுகளிலும் கண்டுபிடிப்புகளிலும் ஈடுபடும் ஆர்வம் இருப்பதால் நீண்டநேரம் வகுப்பறையில் உட்காரக்கூடியவர்களாகவோ, பரந்தளவு குறிப்புகளை எடுக்கக் கூடியவர் களாகவோ இருக்கமாட்டார்கள். அவ்வாறு உட்கார்ந்திருப்பது குழப்பத்தை உண்டு பண்ணக் கூடியதாகவோ, குளப்படிகளை ஏற்படுத்தக்கூடியதாகவோ சிலவேளை அமையலாம்.

ஒரு மாணவன் பெரும்பாலும் இம்மூன்று வழிமுறைகளில் ஏதாவது ஒன்றினூடாகவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது இரண்டினூடாகவோ அல்லது மூன்று வழிமுறைகளினூடாகவுமோ கற்றுக் கொள்ளக் கூடியவராக இருக்கலாம். இருப்பினும் ஒரு மாணவன் பிரதானமாக கற்றுக் கொள்கின்ற ஒரு வழிமுறை இருக்கும். உடுப்பதற்கும் உறங்குவதற்கும் உண்பதற்கும் கதைப்பதற்கும் நடப்பதற்கும் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான Style இருப்பது போலவே ஒரு மாணவனுக்கு படிப்பதற்கும் ஒரு Style நிச்சயமாக இருக்கும். தன்னுடைய Style என்ன என்பதை அறிந்து அவற்றைப் பயன்படுத்தும்போது அதிகமான பிரயோசனங்களைப் பெற்றுக் கொள்ள இயலுமாக இருப்பதோடு கற்றலோடு தொடர்பான ஞாபகத்தில் நிற்காமை, படிப்பதில் ஆர்வம் குறைவு, படிக்கும்போது தூக்கம் போன்ற பிரச்சினைகளையும் குறைத்துக் கொள்ளலாம்.

உங்களுடைய ஸ்டைல் என்ன? (What is Your style?)

இம்மூன்று வகையான மாணவர்களிடம் தங்களுடைய கற்றல் வழிமுறைகளுக்கேற்ற (Learning Styles) பண்புகள் காணப்படும். அவற்றை இங்கு நோக்குவோம்.

1) கேட்டல் மூலம் கற்பவர்கள் (Auditory Learners)

1. வகுப்பறையில் அடிக்கடி அதிகம் பேசக் கூடியவர்களாக இருப்பர்.
2. ஒலி வடிவில் காணப்படும் நூல்கள் (Audio Books). விரிவுரைகள், வாய்மொழி மூலமாக ஒரு விடயத்தை முன்வைத்தல் (Oral Presentations) மற்றும் வாய்வழி அறிவுறுத்தல்கள் என்வற்றினூடாக திறமையாகக் கற்றுக்கொள்வர்.
3. ஒரு தகவல் அது செவி மூலமாகக் கேட்கப்படும் வரை முக்கியத்துவம் குறைந்ததாகவே காணப்படும்.
4. சப்தமிட்டு வாசிப்பதன் மூலம் அதிக பிரயோசனங்களையும் நன்மைகளையும் அடைந்து கொள்வர்.
5. எழுதப்பட்டுள்ள வழிகாட்டல்களை விட வாய்வழி வழிகாட்டல்களைப் பின்பற்றுவதற்கு இயலுமானவர்களாக இருப்பர்.
6. சிறந்த முறையில் மனனமிடக்கூடியவர்களாக இருப்பர்.
7. அதிகமான பெயர்களை ஞாபகத்தில் வைத்திருக்கக் கூடியவர்களாக இருப்பர்.
8. கடந்த கால உரையாடல்கள், சம்பாசனைகள் போன்றவற்றை நம்ப முடியாத அளவுக்கு ஞாபகத்தில் வைத்திருப்பர். உதாரணமாக நகைச் சுவைகள்
9. இவர்களுக்கு இசை மற்றும் பாடல் வரிகள் அதிகமாக ஞாபகத்தில் இருக்கும்.
10. கலந்துரையாடல்கள், விவாதங்கள், அடுத்தவர்களுடன் பேசுதல் போன்றவற்றில் இன்புறுவர்.
11. இசையைச் செவிமடுப்பதில் இன்பங்காண்பதுடன், பாடுதல், விசிலடித்தல், இரைச்சலை ஏற்படுத்தல் இவர்களிடம் காணப்படும்.
12. எழுதப்பட்டுள்ள விடயங்களை வாய் மொழி மூலம் முன்வைக்க விரும்புவர்.
13. வரைபடங்கள், உருவப்படங்கள், பாய்ச்சற் கோட்டுப் படங்கள், வரைபுகள் போன்றவற்றைத் தாமாகவே விளங்கிக் கொள்ளமாட்டார்கள்.
14. அடிக்கடி பாடுவர்.
15. தாய்மொழியல்லாத மொழிகளில் சிறந்த பரிச்சயம் காணப்படும்.
16. குழுவாகப் படிப்பதில் பயன்பெறுவர்.
17. குறைவான வேகத்தில் வாசிப்பர்.
18. பேசும்போது உச்சரிப்பு மிகத் தெளிவாக இருக்கும்.
19. நீண்ட நேரத்துக்கு பேசாமல் அமைதியாக இருப்பது கடினம்.

2) காட்சி, பார்த்தல் மூலம் கற்பவர்கள் (Visual Learners)

1. சஞ்சிகைகள், புத்தகங்கள் மற்றும் வேறு வகையான வாசிப்பு சாதனங்களை அதிகம் நேசிப்பர்.
2. எழுதப்பட்டுள்ள தகவல்களுடன் அதிகம் நெருக்கத்தை ஏற்படுத்துவர். உதாரணமாக: வரைபுகள், வரைபடங்கள். அட்டவணைகள், நிறந்தீட்டப்பட்ட குறிப்புகள் (Highlighted notes) குறிப்பு அட்டைகள் (Flashcards) போன்றவை.
3. குறிப்பெடுக்க இயலாமல் போகும்போது ஏமாற்றமடைந்ததாக உணர்வார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-மூனா ஹானா-

சில்லுகளின் மீது உலகை உருட்டிய

திருவாளர் ஹொண்டா

பாரிய வணிக முயற்சிகள் ஓரிரு நாட்களில் உருவாக்கப் பட்டவையன்று. ஒருவர் அல்லது குழு உயர் அர்ப்பணிப் புடன் எடுத்த நீண்ட கால முயற்சியின் பெறுபேறாகவே உலக மக்களின் மனங்களில் வாழும் வர்த்தகக் குறியீடுகள் தோன்றின. இவ்வாறு தம் வாழ்க்கையை வெற்றிப் பாதையில் செலுத்தி உலகத்தைச் செழுமைப்படுத்திய பல ஆளுமை களை நாம் வரலாற்றில் காண்கிறோம்.

இந்தக் கட்டுரையின் கதாநாயனும் இளமை முதலே அர்ப்பணிப்புகள் செய்து கவலைகளையெல்லாம் கடந்து தனது வணிக பலத்தை உலகிற்குக் காட்டிய ஒரு சாதாரண மனிதரே! தொழில்நுட்பத்தில் உலகில் முன்னணி வகிக்கும் ஜப்பானில் பிறந்த இவர், உலகிற்குப் பெருமையுடன் வழங்கிய வர்த்தகச் சின்னம் ஹொண்டா (Honda) என்ப தாகும். இதன் கீர்த்திமிகு முன்னோடி ஸொய்சிரோ ஹொண்டா (Soichiro Honda) அவர்கள்.

ஸொய்சிரோ ஹொண்டா ஜப்பானின் ஷிஸோகா (Shizuokal) பிரதேசத்தில் 1906 ஆம் ஆண்டு நவம்பர் 17ஆம் திகதி பிறந்தார். அவருடைய குடும்பம் பொருளாதார ரீதியாக மிகச் சாதாரண மட்டத்திலேயே இருந்தது. ஹொண்டாவின் தாய் துணிகளைத் தைத்துக் கொடுப்ப வராக இருந்தார். அவரது பெயர் மிக்கா (Mika). அவரு டைய தந்தை இரும்பு வேலைகள் செய்பவராகவும் துவிச் சக்கர வண்டிகளைப் பழுது பார்ப்பவராகவும் இருந்தார். உடைந்த துவிச்சக்கர வண்டிகளை வாங்கி அவற்றைச் சரிப்படுத்தி உரிய உதிரிப் பாகங்கள் இட்டு மீண்டும் விற்பனை செய்வதன் மூலம் அவர் தமது வருமானத்தை ஈட்டினார்.

இக்கால கட்டத்தில் ஜப்பானில் மிகவும் பிரபல்யம் பெற்று விளங்கிய போக்கு வரத்துச் சாதனம் சைக்கிளாகும். நமது ஹொண்டாவும் சிறுவயது முதலே தந்தையின் சைக்கிள் திருத்தும் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்தார். அவ்வே லைகளில் ஆர்வமாக ஈடுபட்டபோதும் பாடசாலை வேலைகளில் அவர் அவ்வள வாகச் சோபிக்கவில்லை. பாடசாலையின் வருடாந்த முன்னேற்ற அறிக்கையைப் (Report Card) பெற்று அதில் வீட்டுரிமை யாளரின் கையொப்பமும் முத்திரையும் இருப்பது அவசியமாக இருந்தது. குறைந்த புள்ளிகள் பெற்றமையினால் அதனைத் தனது தந்தையிடம் காட்டி அவர் கவலைப் படுவதை ஹொண்டா விரும்பவில்லை.

அவர் பழைய டயர் துண்டினால் ஒரு முத்திரையைச் (Seal) செய்து அதனை பதிந்து கொண்டு போய் பாடசாலையில் கொடுத்தார். ஆனால், அதன்போது ஹொண்டா ஒரு தவறை விட்டிருந்தார். பொதுவாக இறப்பர் முத்திரைகள் செய்யும் போது பதித்தபின் சரியான எழுத்துக்களைக் காட்டும் வகையில் கண்ணாடியில் பார்ப்பது போன்று (Mirror Face) தான் அவை செய் யப்பட வேண்டும். அப்போதுதான் முத்தி ரையை அடித்த பின் அது சரியான வடிவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். இதனால் ஹொண்டாவின் கள்ளத்தனம் ஆசிரியருக்குத் தெரிய வந்தது. அவர் அதனை ஹொண்டாவின் தந்தைக்கு அறிவித்தார். இதற்குத் தண்டனையாக பகல் சாப்பாடில்லாமல் ஒரு நாள் முழங் காலில் நிற்கவேண்டியேற்பட்டது.

தனது விளையாட்டு உபகரணங்களை சரிசெய்து சிறிய வகைப் பொறிகளை சரியாக இயக்கவும் ஹொண்டா சிறு வயது முதலே ஆர்வம் காட்டினார். எப்போதும் கையில் அழுக்குடன் காணப்படும் ஹொண் டாவை வகுப்புத் தோழர்கள் கேலி செய் யாத நாளில்லை. ஆனால் அவர் சைக்கிள் வேலைகள் செய்வதை நிறுத்தவில்லை.

பாடசாலையிலிருந்து விலகி ஆறு வருடங்களுக்குப் பின் அதாவது 1922இல் ஹொண்டா ஒரு பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்து ஆர்ட் ஷோக்காய் (Art Shokai) என்ற கைத்தொழில் நிறுவனத்தில் ஓர் உதவியாளராகச் சேர்ந்தார். அந்நிறுவனம் தலைநகர் டோக்கியோவில் அமைந்திருந்தது. அந்த நிறுவனத்திலேயே வயதில் குறைந்த ஊழியராக அவர் சேரும்போது சுத்திகரிப்பு வேலையும் உணவு பரிமாறும் வேலையும் மட்டுமே எஞ்சியிருந்தன. அதனை ஏற்று தொழிலில் இணைந்த ஹொண்டா, அந்நிறுவன முதலாளியின் ஆலோச னையின் பேரில் ஓர் உதவியாளராகவும் பணியாற்றினார். வேலை முடிந்தவுடனே இரவு நேரங்களில் ஹொண்டா தனது ஆர்வம் காரணமாக ரேஸிங் கார்களை வடிவமைக்கும் பணியில் ஈடுபட்டார். 1923இல் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் அவர் வடிவமைத்திருந்த மூன்று கார் மாதிரிகள் முற்றிலும் சேதமடைந்தன.

இந்தக் காலகட்டத்தில் ஆர்ட் சோக்காய் தொழிற்சாலை மிகவும் ஜனரஞ்சகமான ஒன்றாக விளங்கியது. பல இடங்களிலும் அதன் கிளைகள் திறக்கப்பட்டன. அதில் ஒரு கிளை ஹொண்டாவின் பொறுப்பில் விடப்பட்டது. அப்போது அவருக்கு வயது 21. மோட்டார் வாகனங்களுக்கான புதிய உதிரிப் பாகங்களை அறிமுகம் செய்வதில் அவர் ஆர்வமாக ஈடுபட்டார். மரத்தினால் ஆக்கப்பட்டிருந்த ஸ்போக்குகளுக்கு (Spokes) பதிலாக அவர் இரும்பினால் அவற்றை உருவாக்கினார். இதற்கான பேட்டண்ட் உரிமையையும் அவர் பெற்றார். பின்னர் அவர் புதிய பிஸ்டன் (Piston Rings) வகையொன்றையும் அறிமுகம் செய்தார்.

இவ்வாறு படிப்படியாக விருத்தி செய்து 1936இல் ஒரு புதிய மோட்டார் காரை அமைத்து மோட்டார் கார் ஓட்டப் போட்டியிலும் கலந்து கொண்டார். போட்டியின் இறுதிக் கட்டத்தில் அவர் செலுத்திய கார் விபத்துக்குள்ளானது. ஆகாயத்தில் மூன்று வட்டங்கள் சுற்றிய காரிலிருந்து ஹொண்டா தூக்கியெறியப்பட்டார். கார் உடைந்து நொறுங்கியதுடன் ஹொண்டாவின் கையிலும் முகத்திலும் காயமேற்பட்டது. மூன்று மாதங்கள் வைத்தியசாலையில் தங்கியிருக்க வேண்டியேற்பட்டது.

அவர் உருவாக்கிய 30,000 பிஸ்டன்களில் 50ஐ டொயோட்டா (Toyota) நிறுவனத்திடம் கொடுத்து சரிபார்த்துக் கொள்ள ஒப்படைத்தார். அதில் மூன்று மட்டுமே நல்ல நிலையில் இருப்பதாக அவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் எந்தப் பரீட்சையும் எழுதாததால் அவர் படித்துக் கொண்டிருந்த கல்லூரியில் இருந்து நீக்கப் பட்டார். ஆனால், அவருக்கு தேவையா யிருந்ததெல்லாம் அறிவேயன்றி சான்றிதழ்களன்று.

அவ்வளவு நெருக்கடிகளுக்கும் மத்தியில் 1937இல் ஹொண்டா டொக்காஸ் ஸெய்கி (Tokai Seiki) என்ற பெயரில் தனது சொந்த நிறுவனத்தை ஆரம்பித்தார். அங்கும் பிஸ்டன் உற்பத்தியில் ஈடுபட்டார். சிறிது காலத்தில் டொயோட்டா கம்பனியின் 40% மான பிஸ்டன் தேவையை இவர் நிறைவு செய்தார்.

1945இல் இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஜப்பானும் ஈடுபட்டமையால் அமெரிக்கா போட்ட குண்டுகளில் ஹொண்டாவின் நிறுவனம் தீப்பிடித்துச் சாம்பராயிற்று, இதனால் மனமுடைந்த ஹொண்டா தனது நிறுவனத்தை 450,000 யென்களுக்கு டொயோட்டாவுக்கு விற்று விட்டார். அந்தக் கவலையில் நண்பர்களுடன் சேர்ந்து குடிப்பழக்கத்தில் ஈடுபட்டார்.

அதிலிருந்து மீண்ட ஹொண்டா 1946இல் ஹொண்டா தொழில்நுட்ப ஆய்வு நிறுவகம் என்ற பெயரில் ஒரு தொழிலை ஆரம்பித்தார். அதில் அவர் மோட்டார் சைக்கிள் உற்பத்தியில் ஈடுபட்டார். அது நாளுக்கு நாள் விருத்திப் பாதையில் சென்றது. 1961ஆம் ஆண்டு ஆகும் போது வருடத்துக்கு 100,000 மோட்டார் சைக்கிள் உற்பத்தி செய்யும் நிறுவனமாக அது மாறியது. 1968இல் அத்தொகை மாதத்துக்கு 10 இலட்சம் என்ற உயர் இலக்கை அடைந்தது.

(22ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிதம்

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: எம்.ஐ. அப்துல் ரஹீம், மாவனல்லை

- பகுதி Aஇலிருந்து ஐந்து வினாக்களையும் பகுதி Bஇலிருந்து ஐந்து வினாக்களையும் தேர்ந்தெடுத்து பத்து வினாக்களுக்கு விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவின் சரியான விடைக்கும் 10 புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி A

1. எந்தக் கட்டணமும் செலுத்தாமல் குளிர் சாதனப் பெட்டியை வீட்டுக்கு எடுத்துச் செல்லுங்கள். மாதா மாதம் ரூ. 3325 வீதம் 12 சம மாத தவணைக் கட்டணமாக பணத்தை செலுத்த முடியும்.

i. குளிர்சாதனப் பெட்டியொன்றை பெற்ற அஜ்வத் செலுத்த வேண்டிய மொத்த தொகை யாது?

ii. மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?

iii. மாதமொன்றில் ரூபா. 325ஐ வட்டியாக செலுத்தியிருந்தால் மொத்த வட்டித் தொகை யாது?

iv. ஒரு மாத அலகிற்கான வட்டியைக் கணிக்க.

v. அறவிடப்பட்ட வருட வட்டி சதவீதத்தைக் காண்க.

02. சார்பு $y=x(x-2)-4$ இன் தரப்பட்டுள்ள xஇன் பெறுமானங்களுக்கு ஒத்த yஇன் பெறுமானங் களைக் கொண்ட பூரணமற்ற அட்டவணை கீழே காணப்படுகிறது.

x	-2	-1	0	1	2	3	4
y	4	-1	-4	-5	-4		4

a. i. $x=3$ ஆகும்போது y இன் பெறுமானங்களைக் காண்க. (1 புள்ளி)

ii. x, y அச்சுக்களில் பொருத்தமான அளவி டையைத் தெரிவு செய்து சார்பின் வரைபை வரைக. (3 புள்ளி)

b. உமது வரைபைக் கொண்டு,

i. சார்பின் இழிவுப் பெறுமானத்தைக் காண்க. (1 புள்ளி)

ii. சார்பு மறையாகும் அல்லது பூச்சியமாகும் x இன் பெறுமான வீச்சை எழுதுக. (1 புள்ளி)

iii. சார்பு $y=4-x(x-2)$இற்கும் நீர் வரைந்த வளையியிற்குமான இரு ஒற்றுமைகளை எழுதுக. (2 புள்ளி)

c. $\sqrt{5}+1$ ஆக இருக்கும்போது தரப்பட்ட சார்பின் பெறுமானம் பூச்சியமாகும். இதிலிருந்து $\sqrt{5}$ இன் பெறுமானத்தை உய்த்தறிக. (2 புள்ளி)

03.

a. தீர்க்க: $\dfrac{x+2}{4(3x-1)}-\dfrac{1}{(3x-1)}=\dfrac{1}{32}$ (3 புள்ளி)

ii. காரணி காண்க: $8-72k^2$ (2 புள்ளி)

b. தரப்பட்ட சரிவக வடிவ அட்டையின்



i. அட்டையின் பரப்பளவு $18cm^2$ எனின் x ஆனது $2x^2+2x-9=0$ எனும் இருபடிச் சமன் பாட்டினை திருப்திப்படுத்தும் எனக் காட்டுக. (2 புள்ளி)

ii. மேற்குறித்த சமன்பாட்டினைத் தீர்ப்பதன் மூலம் x இன் பெறுமானமானது $\dfrac{-1}{2}-(1+\sqrt{19})$ அல்லது $\dfrac{-1}{2}-(1-\sqrt{19})$ எனக் காட்டுக. (3 புள்ளி)

04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

a. A எனும் நகரத்திலிருந்து குறித்த நேரத்தில் ஒன்றுக்கொன்று எதிர்த்திசையில் சைக்கிளோட்டிகளான அசாட், ரமீஸ் ஆகியோர் முறையே $x\ kmh^{-1}$, $y\ kmh^{-1}$ எனும் சீரான கதியில் பயணம் செய்தனர். அசாட் என்பவர் 2 மணி நேரமும் ரமீஸ் 3 மணி நேரமும் பயணம் செய்தால் இருவரும் பயணம் செய்த மொத்த தூரம் 85km ஆகும். இருவரும் 4 மணி நேரம் பயணம் செய்தால் இருவரும் பயணம் செய்த மொத்த தூரம் 140km ஆகும்.

i. x,y இல் இரு சமன்பாடுகளை உருவாக்குக. (2 புள்ளி)

ii. அசாட், ரமீஸ் பயணம் செய்த சைக்கிள்களின் கதி யாது? (4 புள்ளி)

b. $A=\begin{bmatrix} a & 2 \\ -1 & 5 \end{bmatrix}$, $B=\begin{bmatrix} 3 & -1 \\ -2 & b \end{bmatrix}$ எனின் $2A+B=\begin{bmatrix} -3 & 3 \\ -4 & 8 \end{bmatrix}$ ஆகும். இதிலிருந்து a,b இன் பெறுமானங்களைக் காண்க.

05. வட்டவடிவமான பூந்தோட்டமொன்றில் மையம் O ஆகும். தோட்டத்தின் பரிதியில் உள்ள 4 பூக்கன்றுகள் A,B,C,D ஆகும். AB=8m, BC=15m எனின்,



i. A,C ஆகிய கன்றுகளுக்கிடையிலான தூரம் யாது?

ii. $C\hat{A}D = 27^\circ\ 40^\circ$ எனின் C,D இற்கிடையிலான தூரத்தை 1ம் தசமதானத்தில் தருக.

iii. A,D இற்கிடையிலான தூரத்தைக் முழு எண்ணில் தருக.

06. முச்சக்கர வண்டி தரிப்பிட நிலையமொன்றில் காணப்பட்ட முச்சக்கர உரிமையாளர்கள் குறித்த தினத்தில் சம்பாதித்த பணத்தொகை பற்றிய தகவல்கள் தரப்பட்டுள்ளன.

வருமானம் (ரூபாவில்)	மீடிறன்
300-350	9
350-400	9
400-450	13
450-500	18
500-550	12
550-600	7
600-650	2

i. அத்தரிப்பிடத்தில் காணப்பட்ட மொத்த முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை யாது? (1 புள்ளி)

ii. அதிகமான வண்டிகளின் வருமானம் எந்த ஆயிடையில் காணப்பட்டது? (1 புள்ளி)

iii. அந்த ஆயிடையின் நடுப்பெறுமானத்தை உத்தேச இடையாகக் கொண்டு அந்நாளில் ஒரு வண்டியின் மூலம் கிடைத்த வருமானத்தின் இடைப்பெறுமானத்தைக் கிட்டிய ரூபாயில் தருக. (6 புள்ளி)

iv. ஒரு வாகனத்திற்கு நாளாந்தம் ரூபா.150 செலவு ஏற்படுமெனின், அனைத்து வாகனங்களினதும் ஒரு நாளைய தேறிய இலாபம் எவ்வளவு? (2 புள்ளி)

பகுதி B

எவையேனும் 5 வினாக்களுக்கு விடை தருக.

07. a) A,B எனும் இரு நகரங்களுக்கிடையிலான தூரம் 77km ஆகும். A இலிருந்து Bஐ அடைய இரு யாத்திரிகர்கள் தினந்தோறும் நடந்து சென்ற தூரங்கள் பற்றிய தகவல்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

நாள்	1வது	2வது	3வது
அஜித்	20km	17km	14km
குமார்	5km	7km	9km

i. இருவரும் 4ம், 5ம் நாளில் சென்ற தூரங்களை தனித்தனியே எழுதுக. (2 புள்ளிகள்)

ii. அஜித், குமார் சென்ற தூரத்தின் nஆம் உறுப்பைக் காண்க. (2 புள்ளிகள்)

iii. எத்தனையாம் நாளில் அவர்கள் குறித்த தூரத்தை அடைவார்கள் எனத் தனித்தனியே காண்க. (3 புள்ளிகள்)

b. ஒருவன் தனது தந்தைக்கு தினந்தோறும் வழங்கிய தொகையினை தொடராக எழுதிய போது அது ஒரு பெருக்கல் தொடராக அமைந்து காணப்பட்டது. அவன் 1ம் நாளில் ரூ. 60உம் 3ம் நாளில் ரூ. 240உம் வழங்கியிருந்தால் 2ம் நாளில் எவ்வளவு தொகையை வழங்கியிருப்பான்? (3 புள்ளிகள்)

08. cm/mm அளவிடையுள்ள நேர்விளிம்பு, கவராயம் ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. AB = 7cm, $A\hat{B}C = 60^0$ BC = 10cm ஆகவுள்ள ΔABC யை அமைக்க (3புள்ளிகள்)

ii. ACற்கு செங்குத்து இரு சமகூறாக்கி ஒன்றை வரைக. அது BCஐ வெட்டும் புள்ளியை D எனக் குறிக்க. (2 புள்ளிகள்)

iii. AD + DB = 10cm ஆவதற்கான காரணத்தை தருக. (அளக்காமல்) (2 புள்ளிகள்)

iv. D இலிருந்து AB இற்கு செங்குத்து DTஐ அமைக்க. (1 புள்ளிகள்)

v. இதிலிருந்து Sin 60^0 = 0.86 எனக் காட்டுக. (2 புள்ளிகள்)

09. a ஆரையும் 48cm உயரமும் உடைய கூம்பு வடிவ பாத்திரம் ஒன்றினுள் ஒரு பதார்த்தம் முற்றாக நிரம்பும் வண்ணம் ஊற்றப்பட்டுள்ளது.

i. நிரப்பப்பட்ட பானத்தின் கனவளவு $16\pi a^2$ எனக்காட்டுக. (2 புள்ளிகள்)



ii. இதிலுள்ள பானமானது அடிப் பரப்பு r^2 ஆகவுள்ள கனவுருவ வடிவ பாத்திரம் ஒன்றினுள் ஊற்றப்பட்ட போது h உயரத்திற்கு நிரம்பியது எனின் $r = 4a\left(\frac{\pi}{h}\right)^{\frac{1}{2}}$ எனக்காட்டுக. (3 புள்ளிகள்)

iii. a= 26.5, π = 3.142, h = 4.73 எனின் r இன் பெறுமானத்தை மடக்கை அட்டவணையைப் பயன்படுத்திக் காண்க. (5 புள்ளிகள்)

10. தரப்பட்ட வட்டத்தில் பரிதியிலுள்ள புள்ளிகள் P,Q,M,R ஆகும். PR ----,QS, QR --- PT ஆகும்.



i. $R\hat{P}M$ இற்கு சமமான கோணமொன்றைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii. $M\hat{Q}T = S\hat{Q}T$ எனவும் காட்டுக. (3 புள்ளிகள்)

iii. முக்கோணி $Q\hat{M}N$ ஒரு இரு சமபக்க முக்கோணி எனக் காட்டுக. (3 புள்ளிகள்)

iv. RSNT ஒரு வட்ட நாற்பக்கல் எனக் காட்டவும். (2 புள்ளிகள்)

11. தரப்பட்டுள்ள ΔABC இல் AB//PQ, AP=XC ஆகும். இதிலிருந்து

i. AX=PC எனவும் (3 புள்ளிகள்)

ii. ΔABC, ΔPQC என்பன சமகோண முக்கோணிகள் எனவும் (3 புள்ளிகள்)

iii. $\frac{CQ}{QB} - \frac{PX}{AP} = 1$ எனவும் காட்டுக. (4 புள்ளிகள்)

12. குறித்த தினத்தில் அரசாங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 170 பேரில் டெங்கு, நீரிழிவு நோயாளர்கள் பற்றிய தகவல் வென்னுருவில் தரப்பட்டுள்ளது. இவர்களில் நீரிழிவு நோயற்ற ஆண்கள் 55 பேராகும்.



i. மொத்த ஆண்களின் எண்ணிக்கை யாது? (2 புள்ளிகள்)

ii. இரண்டு வகை நோய்களும் உள்ள பெண்கள் எத்தனை பேர்? (2 புள்ளிகள்)

iii. டெங்கு நோயுள்ள பெண்கள் 54 பேர் எனின், டெங்கு நோய் மட்டுமுள்ள பெண்கள் எத்தனை பேர்? (2 புள்ளிகள்)

iv. டெங்கு நோயுள்ளவர்கள் 82 பேர் எனின் டெங்கு நோயோ அல்லது நீரிழிவு நோயோ இல்லாத ஆண்கள் எத்தனை பேர்? (2 புள்ளிகள்)

v. இவ்விரு நோய்களில் எதுவும் அற்றவர்கள் 62 பேர் எனின், நீரிழிவு நோய் மட்டுமுள்ளவர்கள் எத்தனை பேர்? (2 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஸ்ஹர் ஸகரிய்யா

சகோதரி மர்யம் ஜமீலா

"வாழ்வு பற்றியும் மரணம் பற்றியும் என்னைப் பெருங் குழப்பத்தில் ஆழ்த்தியிருந்த பல கேள்விகளுக்கு தீர்வுகளை தேடித் தந்த மார்க்கமே இஸ்லாம். சத்தியத்திற்கான பாதை இஸ்லாம் மட்டுமே என்பதை உறுதியாக நம்புகின்றேன். அது மனித ஆன்மாவைக் குணப்படுத்தும் வெற்றிகரமான மருத்துவம். அல்குர்ஆனை நான் வாசிக்கத் தொடங்கியது முதல் மார்க்கம் என்பது மனித வாழ்விற்கு இன்றியமையாதது மட்டுமல்ல, அதுதான் வாழ்க்கை என்று உணர்ந்து கொண்டேன். இந்த இஸ்லாத்தின் காரணமாக மட்டுமே அரபிகள் நாகரிகமிக்க உயர்ந்த சமூகமாக மாறியுள்ளனர் என்ற உண்மையை இஸ்லாத்தை ஆழமாக கற்கும்போது உணர்ந்து கொண்டேன். முஸ்லிம் பெண்களுக்குக் கிடைத்த மிகப் பெரும் ஓர் அருளே இஸ்லாம் என்பதை அவர்கள் மறந்து விடக் கூடாது. அவர்களது கற்பையும் சுய கௌரவத்தையும் பாதுகாக்கும் வகையிலேயே இஸ்லாத்தின் சட்டங்கள் அமைந்திருக்கின்றன. குடும்ப சீரழிவு, வரம்பு மீறல்களிலிருந்து அவர்களது வாழ்வைக் காக்கும் காப்பரண்களே இந்த மார்க்கத்தின் சட்டங்கள்."

இஸ்லாமிய குடும்பத்தில் பிறந்து, இஸ்லாமிய சூழலில் பயிற்றுவிக்கப்பட்ட பெண் சொன்ன வார்த்தைகளல்ல மேற்கூறியவை. யூத சமூகத்தில் பிறந்து, இஸ்லாத்திற்கெதிரான நச்சுக் கருத்துகள் அதிகம் பரப்பப்படும் ஒரு சூழலில் வளர்ந்து தனது சுய முயற்சியால் இஸ்லாத்தைக் கற்று உலகளாவிய முஸ்லிம் சமூகத்திற்காக உழைத்த ஒரு பெண்ணின் வார்த்தைகளே இவை. இந்த வார்த்தைகளுக்குச் சொந்தமானவர் சென்ற ஒக்டோபர் மாதம் லாஹூரில் தனது 78 ஆவது வயதில் இறையடி எய்திய சகோதரி மர்யம் ஜமீலா ஆவார்.

1934 இல் அமெரிக்காவின் நிவ்யோர்க் நகரில் யூத பெற்றோருக்குப் பிறந்த மர்யம் ஜமீலா மதச் சார்பற்ற சூழலில் வளர்க்கப்பட்டார். இவரது இயற்பெயர் மார்கரெட் மார்கஸ் என்பதாகும். இவர் பிறந்து வளர்ந்த சூழல் ஜாஹிலிய்ய மயப்பட்டிருந்தபோதிலும் சிறு வயது முதலே ஒழுக்கமிக்க வாழ்வொன்றை பின்பற்றும் பாக்கியத்தை இறைவன் மர்யம் ஜமீலாவுக்குக் கொடுத்திருந்தான். அவர் வாழ்வில் ஒருபோதும் மது அருந்தியது கிடையாது. சிறு வயது முதலே ஆண், பெண் கலப்பின்றி வாழக் கற்றுக் கொண்டார். அந்த சூழலில் அடிக்கடி நடைபெறும் களியாட்டங்களிலோ, சமய விழாக்களிலோ பங்குபற்றுவதை மர்யம் முற்றிலும் தவிர்ந்து கொண்டார்.

இஸ்லாத்தைப் பற்றியும் முஸ்லிம் சமூகத்தைப் பற்றியும் தப்பபிப்பிராயங்கள் அவரது பிஞ்சு மனதில் ஊட்டப்பட்டபோது அக்கருத்துக்களை ஆராய்ச்சிக் கண்கொண்டு நோக்க ஆரம்பித்தார். இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது பிள்ளைகளின் சந்ததியில் தோன்றிய இரு இனத்தவர்களே முஸ்லிம்களும் யூதர்களும் என்ற செய்தியை யூத ஆலயங்களில் அடிக்கடி மர்யமுக்கு கேட்க நேர்ந்தது. இந்த செய்திகளே மர்யமின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் இஸ்லாம் பற்றிய நல்லெண்ணங்களை ஏற்படுத்தியிருக்கக்கூடும்.

1947, 1948 காலப்பகுதியில் பலஸ்தீனிற்குள் இஸ்ரேல் என்ற தேசம் உருவாக்கப்பட்டு பலஸ்தீனிய முஸ்லிம்கள் கடுமையான சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். 1948 இல் அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் நடந்த யுத்தத்தில் இஸ்ரேல் வெற்றிபெற்றது. இந்த வெற்றியை அமெரிக்காவில் உள்ள யூத சமூகமும் கொண்டாடியது. ஆனால் மர்யம் இந்த வெற்றியில் மகிழ்ச்சியடையாமல் பலஸ்தீன முஸ்லிம் சிறார்களின் அவல நிலை கண்டு கவலைப்பட்டார். இந்த வெற்றியைக் கொண்டாடுவது அநீதிக்கு ஒத்துழைத்துச் செல்வதாகும் என்று தன் பெற்றோருடன் இந்த விடயத்தில் முரண்பட்டார். உலகெங்கும் முஸ்லிம்கள் படும் அவலங்களை மிக உன்னிப்பாக மர்யம் அவதானித்தபோதே இஸ்லாத்தை பற்றி அறிய வேண்டும் என்ற வேட்கை அவரது உள்ளத்தில் எழுந்தது.

யூத மதத்தின் நம்பிக்கைக் கோட்பாடுகளில் நம்பிக்கை இழந்திருந்த மர்யம் சத்தியத்தை கண்டறியும் நோக்கில் பல்வேறுபட்ட மதங்களையும் கற்க ஆரம்பித்தார். 1953ல் நிவ்யோர்க் பல்கலைக் கழகத்தில் கற்றுக் கொண்டிருந்தபோதே மர்யமுக்கு பிரித்தானிய எழுத்தாளர் Marmaduke Pickthall எழுதிய அல்குர்ஆனின் ஆங்கில மொழிபெயர்ப்பு (The meaning of the glorious Koran) கிடைத்தது. இவரது உள்ளத்தில் இஸ்லாம் பற்றிய நல்லபிப்பிராயங்களை ஏற்படுத்திய மற்றொரு நூல் மிஷ்காத் அல்மஸாபீஹ் என்ற ஹதீஸ் தொகுப்பின் ஆங்கில மொழிபெயர்ப்பாகும். ஷரீஅத் துறையில் கற்கின்ற மாணவர்களின் பிரதான உசாத்துணையாகக் கருதப்படும் இந்நூலை சகோதரி மர்யம் தனியாகக் கற்றுத் தேறினார். இவ்விரு நூல்களினூடாக இஸ்லாத்தை கற்றபோது உண்மையான இஸ்லாத்திற்கும் நடைமுறையில் முஸ்லிம் சமூகத்திற்கும் இடையில் காணப்படும் பெரும் இடைவெளிகளை அவதானிக்க முற்பட்டார்.

நிவ்யோர்க் பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருந்தபோது சகோதரி மர்யமுக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனத்தின் காரணமாக உயர் கல்வியையே துறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 1959ல் வைத்தியசாலையிலிருந்து சிகிச்சை பெற்றுத் திரும்பிய பின் உயர்படிப்பை தொடராமல் சத்தியத்தை தேடும் பாதையில் உழைக்க ஆரம்பித்தார். இஸ்லாம் பற்றி தனது உள்ளத்தில் காணப்பட்ட தப்பபிப்பிராயங்களை நீக்கிக் கொள்வதற்காக சர்வதேச முஸ்லிம் அறிஞர்களுடன் கடிதத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். இந்த வகையில் அல்ஜீரியாவில் பஷீர் இப்ராஹீம், ஸஊத் ரமழான் பூதி, சிரியாவில் மஹ்ரூப் துவாலிபி போன்றோருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். இத்தொடர்புகளின் விளைவாக மர்யமுக்கு ஷஹீத் ஸய்யித் குதுப் அபுல் அஃலா மவ்தூதி போன்றோருடனான கடிதத் தொடர்பு ஏற்பட்டது.

இத்தொடர்களின் விளைவாக சகோதரி மர்யம் 1961 மே மாதம் 24 ஆம் திகதி இஸ்லாத்தை ஏற்றார். இமாம் அபுல் அஃலா மௌதூதியுடனான கடிதத் தொடர்பு மர்யம் ஜமீலாவின் வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. 1959 முதல் தொடர்ச்சியாக இஸ்லாம் பற்றியும் முஸ்லிம் சமூகத்தைப் பற்றியும் தனக்கிருந்த சந்தேகங்களை கடிதத் தொடர்பு மூலம் நீக்கிக் கொண்டார். இஸ்லாத்தை ஏற்றதைத் தொடர்ந்து மௌலானா மௌதூதியின் வேண்டுகோளின் பெயரில் 1962 பாகிஸ்தானுக்கு புலம்பெயர்ந்து சென்றார். இமாமவர்களது வீட்டிலேயே சகோதரி மர்யம் இரண்டு வருடங்கள் தங்கினார். மௌலானா மௌதூதியின் வேண்டுகோளின் பெயரில் பாகிஸ்தான் ஜமாஅத்தே இஸ்லாமியின் முன்னணி உறுப்பினர் முஹம்மத் யூசுப் கான் மர்யம் ஜமீலாவை திருமணம் செய்து கொண்டார்.

அமெரிக்காவிலிருந்து புலம் பெயர்ந்து வந்தது முதல் சகோதரி மர்யம் அந்த நாட்டிற்கு திரும்பிச் செல்ல ஒருபோதும் முயற்சித்ததில்லை. அமெரிக்காவில் இஸ்லாத்தை தழுவிய பின் அங்கு வாழ்ந்த காலப்பிரிவிலும் பாகிஸ்தானில் வாழ்ந்த காலப்பிரிவிலும் தனது பெற்றோரை இஸ்லாத்தின் பக்கம் அழைத்தார். எனினும் அவர்கள் இஸ்லாத்தை ஏற்காமலேயே மரணித்தனர்.

சகோதரி மர்யம் 20க்கு மேற்பட்ட இஸ்லாமிய நூல்களை வெளியிட்டுள்ளார். அவரது எழுத்துக்கள் பெரும்பாலும் இஸ்லாத்தின் சிறப் பம்சம், காலத்திற்கேற்ற மார்க்கம் இஸ்லாம் போன்ற கருத்துக்களையே உள்ளடக்கியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெற்றி அல்லது வீர மரணம். புறப் படுங்கள் தோழர்களே!"

கடல் தாண்டி எதிரியின் மண்ணில் பாதங்கள் பதிந்த பின்னர் ஒரு வீரத் தள பதி உதிர்த்த கர்ஜனைதான் இது. தோற்று விடுவோமோ என்ற துளி அச்சமுமில் லாமல் கடல் அலைகளையே முட்டி மோதி வந்த கப்பல்களை கரையிலே வைத்து எரித்துவிட்டுத்தான் அவர் அவ்வாறு கர்ஜித்தார்.



இலட்சியம் வெற்றி பெற...

தனது இலக்கு பற்றிய தெளிவு, இலக்கு நோக்கிய கவனக் குவிப்பு, இலக்கிலே அசையாத நம்பிக்கை, இலக்கை அடை வதிலுள்ள வேட்கை, இலக்கை அடைந்தே தீருவேன் என்ற திடவுறுதி, இறைவன் மீது இமாலய நம்பிக்கை அனைத்தும் சேர்ந்து கப்பல்களை எரித்துவிட்டு எதிரிகளை துவம்சம் செய்யப் புறப்பட்டுவிட்டது.

இத்தனைக்கும் அவர் உங்களைப் போன்ற 17 வயது வாலிபர். நீங்கள் க.பொ.த (சா.த) பரீட்சை எழுதிவிட்டு பெறுபேறுக்காகக் காத்திருக்கும் பொழு துகளில் அவர் சாம்ராஜ்யத்தையே சாம் பராக்கி வெற்றி கொள்ளப் புறப்பட்டு விட்டார்.

அவரது இலட்சியத்தில் அவருக் கிருந்த அசையாத நம்பிக்கை அவருக்கு வெற்றியைக் கொடுத்தது. ஒரு சாம்ராஜ் யத்தையே நிர்மூலமாக்கி வெற்றி கொள் வதற்கு அவர் அழைத்துச் சென்றது வெறும் சில ஆயிரம் பேரைத்தான். அவர் வேறு யாருமல்ல, தாரிக் பின் ஸியாத் எனும் வீரத் தளபதியே! அவர் வெற்றி கொண்டது அன்றைய சாம்ராஜ்யமான ஸ்பெய்ன் ஆகும்.

இளம் காளையரான இளைஞர்களே! பதின்மப் பருவத்தின் சிட்டுக்களே! உங்கள் இலட்சியப் பாதையில் முட்டி மோதி வெற்றி கொள்ளுங்கள். தடை களைத் தகர்த்தெறியுங்கள். பரீட்சை முடிந்து ஓய்ந்திருக்கும் பொழுதுகளில் உங்கள் இலட்சியத்தைப் பட்டை தீட்டுங்கள்.

ஓய்வாக இருப்பதென்றால் நியூட்டனைப்போல ஓய்வாக இருங்கள். ஓய்வின் பொழுதுகளில்தான், ஓய்வாக இருந்து சித்தித்துத்தான் புவியீர்ப்பு விசையைக் கண்டு பிடித்தார் அவர். ஓய்வு உங்கள் இலட்சியத்திற்கான தெளி வான பாதையை வரைந்து கொடுக்க வேண்டும். சாதிக்கப் பிறந்தவர்கள் நீங்கள், சோர்ந்து போய்விடக் கூடாது. சுறுசுறுப்பாய் இயங்குங்கள். சாதனை உங்கள் உதிரங்களில் தான் பாய்ந்து கொண்டிருக்கிறது.

இதமாக, இனிதாக சிந்தியுங்கள்.

இலட்சியங்கள் வரையப்படுவதற்கும் ஈடேறுவதற்கும் இலட்சியம் பற்றிய சிந்தனை தேவை. உங்கள் சிந்தனையே உங்கள் இலட்சியத்தை வகுத்துத் தரும். மீண்டும் மீண்டும் உங்கள் இலட்சியத்தைப் பற்றி நீங்கள் சிந்திப்பது உங்கள் இலட்சியத்தை சரியாக வரையறை செய்ய உதவும். உங்களை நீங்களே குடைந்து குடைந்து வினா எழுப்பி சிந்தியுங்கள்.

"சுய அலசல் நமது பலவீனங்களை அம்பலப்படுத்தும். ஆனால் யாருமே அதை ஒப்புக் கொள்ள மாட்டோம். அங்குலம் அங்குலமாக உங்களை சோதனை போட்டுக் கொள்ளும்போது, கோர்ட்டும் நீங்களே; நீதிபதியும் நீங்களே! இருதரப்பு வக்கீலும் நீங்கள்தான்! வாதியும் நீங்கள்தான்; பிரதிவாதியும் நீங்கள்தான்! விசாரிக்கப்படு வதும் நீங்களே! உண்மையை நேர்மையுடன் எதிர்கொள் ளுங்கள்! உங்களிடமே திட்டவட்டமான கேள்விகளை எழுப்புங்கள்! மழுப்பல் இல்லாத நேரடிப் பதில் கேளுங்கள்!

(8ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைச் சரம்

தாயே

அன்பின் அன்னையே!
உன் ஓதலில் நான் தூங்க
நெஞ்சில் பல சோகங்களாய்
பட்டினியாய் நீ- என்னை
பாலூட்டி வளர்த்தாயே!

துன்பம் பல சுமந்திடுவாய்
இன்பம் பல தந்திடுவாய்
உன் நெஞ்சில் சோகங்கள்
என் முகத்தில் புன்னகையோ

என் அன்பின் தாயே
நீ வாழ என் வாழ்த்துக்கள்

எஸ்.எப். இஹ்ஸானா
தோப்பூர்

கல்வி

பாடம் என்ற கடலில் கற்று
பரீட்சை என்ற படகில் வென்று
மாணவன் என்ற மாண்பில் பயின்று
ஆசிரியர் போற்றும் புகழைப் பெற்றேன்



என்றும் கல்வி உன்னோடுதான்
வாழ்ந்து பார் என் தோழா
நாளை கல்வி உனக்கே
வெற்றியோடு போராடு

ஏ.ஐ.எம். முஜாஹித், தரம்: 9
சிராஜியா அரபுக் கல்லூரி
ஓட்டமாவடி

முஸ்லிம் பெண்ணே நீ புறப்படு

பெண்ணே
உன் கண் திறந்து பார்
உன் சமுதாயத்தின் நிலை தெரியும்
உன் நிலை உனக்குப் புரியும்

சீர்கெட்டுக் கிடக்கும் பெண்ணை
சீர்திருத்துவதும் உந்தன் பணியே
இப் பணியின் மகிமையை சில நிமிடம் கூட
சிந்தித்துப் பார்த்தாயா?

பெண்ணே உன்னால் முடியாதது என்ன?
முயன்று பார்
சீர்கெட்ட சமுதாயத்தின்
சீர்நலம் பேண
சிதைவுற்ற மானிடரின் உள்ளத்தை
சீர்மையாய் செதுக்க...

எம்.ஜே.எப். ஜெஸிரா
3ஆம் வருடம்
பாத்திமா ஸஹ்ரா ம.அ.க.

நல்ல நூல்களை நாளும் கற்போம்

நல்ல நூல்களை
நாளும் கற்போம்

ஆபிரகாம் லிங்கனாம்
அமெரிக்காவின் அதிபராம்
அவரும் அன்று அரிய நூல்களை
அனுதினமும் கற்றவராம்!

இந்தியாவின் மேதையாம்
இனிய காந்தி என்பவராம்
நல்ல நல்ல நூல்களை
நாளும் அவரும் கற்றவராம்

நல்ல நல்ல நூற்களை
நாளும் நாளும் கற்று நாம்
நல்லறிவு பெற்று - என்றும்
நாட்டில் நனி சிறந்து வாழ்வோம்

எம்.எஸ். இம்ராஸ், தரம்: 9
சிறாஜியா அரபுக் கல்லூரி
ஓட்டமாவடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

வினாப்பத்திரம் I **நேரம் 45 நிமிடம்**

வித்தியாசமான படத்திற்கு கோடிடுக.

1.   
i. ii. iii.

2. 
i. ii. iii.

3. 
i. ii. iii.

பிழையான வாக்கியங்களுக்குக் கோடிடுக.

4. i. சேறிழுத்து உவர்நீர் கட்டி நெல் விளைவித்தான்.

   ii. களிமண் பதப்படுத்தி மட்பாண்டங்கள் செய்தான்.

   iii. கம்மாலையில் நெருப்பு வளர்த்து வாள் செய்தான்.

5. i. கமலன் அன்னையையும் பிதாவையும் வாழ்த்தி வணங்கினான்.

   ii. மாணாக்கனும் மனைவியும் கல்வியில் ஆர்வம் காட்டினர்.

   iii. நடிகனும் நடிகையும் ஆடிப் பாடினர்.

6. பெயர் அடைமொழி உள்ள வாக்கியத்திற்கு கோடிடுக.

   i. எருது வயலை உழுதது.

   ii. சிங்கம் மானை பாய்ந்து பிடித்தது.

   iii. புலி வரிக்குதிரையை துரத்தியது.

7. எழுவாய் அடைமொழி உள்ள வாக்கியத்திற்கு கோடிடுக.

   i. கொடிய சிங்கத்தை நரி ஏமாற்றியது.

   ii. பெரிய பானைக்குள் சிறிய எலி பாய்ந்தது.

   iii. கமலன் இனிமையாகப் பாடினான்.

8. மிகச் சரியான வாக்கியத்திற்குக் கோடிடுக.

   i. மாரி காலத்தில் மழை பொழியும்.

   ii. சூரியன் மேற்கில் மட்டும் உதிக்கும்.

   iii. கல்யாண வீட்டில் ஒப்பாரி வைக்கப்படும்.

9. i. பூனை - சீறும் ii. குரங்கு - அழும்

10. i. நல்வழி, காற்று, கலாசாலை

    ii. நள்வழி, காத்று, களாசாளை

நான்கு உருக்களில் ஒன்று மட்டும் வித்தியச மானது. அதன்கீழ் கீறிடுக.

11.  
A B

 
C D

12.  
A B

 
C D

13.  
A B

 
C D

14. நீள அளவின்படி படிப்படியாக கூடிச் செல்லும் ஒழுங்கு முறைக்கு ஏற்ப எழுதப்பட்டுள்ள அளவுகள்.

    i. மீற்றர், சென்றி மீற்றர், கிலோ மீற்றர்

    ii. சென்றி மீற்றர், மீற்றர், கிலோ மீற்றர்

    iii. கிலோ மீற்றர், சென்றி மீற்றர், மீற்றர்

15. காலத்தின்படி படிப்படியாகக் கூடிச்செல்லும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குமுறைக்கு ஏற்ப எழுதப்பட்டுள்ள தொகுதி.

i. நாள், மாதம், மணி, வருடம்

ii. நாள், வாரம், மாதம், வருடம்

iii. மணித்தியாலம், செக்கன், நிமிடம், நாள்

16. இக்கூட்டங்களை சரியாக காட்டும் விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

i. (AB) (XY)   ii. (CD) (FE)

iii. (MN) (PO)

17. இக்கடிகாரம் சரியான நேரத்திலும் 12 நிமிடங்கள் பிந்திச் செல்கிறது. சரியான நேரம்



i. 9.33 மணி

ii. 9.55மணி

iii. 9.57மணி

நான்கு பிள்ளைகளின் பிறந்த தினங்கள் பின் வருமாறு;

(பிலால்: 2003.10.08, யூசுப் 2003.08.10, சபியா 2009.10.10, அத்தியா 2010.01.01)

18. மேலேயுள்ள நான்கு பிள்ளைகளில் மூத்த பிள்ளை யார்?

i. சபியா   ii. அத்தியா

iii. யூசுப்   iv. பிலால்

19. நான்கு பிள்ளைகளில் வயதில் மிகவும் இளையவர் யார்?

i. சபியா   ii. அத்தியா

iii. யூசுப்   iv. பிலால்

20. இவ்வுருவின்படி Bயினால் காட்டப்படுவது.



i. கிளி

ii. சிங்கம்

iii. முதலை

முதலாவது நிரலில் தரப்பட்டுள்ள எண் கூட்டினுள் உள்ள பெறுமானத்திற்கு ஏற்ப பிரதியீடு செய்யத்தக்க எண் கூட்டைத் தரப் பட்டுள்ள எண் கூடுகளில் இருந்து தெரிவு செய்க.

21. (12 x 3)   i. (2 x 2 x 8)   ii. (4 x 3 x 3)

iii. (2 x 3 x 4)

(10 + 12 + 20)   i. (5 x 2 x 3)   ii. (6 x 7)

iii. (12 x 2 x 2)

பின்வரும் பாடலை அவதானித்து விடை தருக.

தோகை விரித்த மயிலொன்று
ஆடி மகிழ்ந்து நின்றது
புள்ளி இட்ட மானொன்று
புலியைக் கண்டு மறைந்தது

22. இப்பாடல் குறிப்பிடப்படும் இடம் யாது?

23. இப்பாடலில் வந்துள்ள கொடிய மிருகம் யாது?

24. மயிலொன்று என்பதைப் பிரித்து எழுதுக.

25. பாடலில் இடம்பெற்ற பெயரும் வினையுமாக வரும் சொல்.

பாடலில் இடம்பெற்ற

26. பெயரெச்சம்:

27. வினையெச்சம்:

28. புலியைக் கண்டு மறைந்தது என்பதில் செயப்படு பொருள்:

29. பாடலில் இடம்பெறாத இறந்தகால சொல் ஒன்று தருக.

பின்வரும் சிங்கள சொற்களுக்கான கருத்தை எழுதுக.

30. எலவலு:....................

31. பார:....................

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

32. நல்வாழ்வுக்கு முக்கியமானவை எது?

i. உடற் பயிற்சி   ii. குறைவற்ற நித்திரை

iii. பசி

33. நற்பிரஜை உருவாக்கப்படும் சிறந்த இடம்.

i. பாடசாலை   ii. வைத்தியசாலை

iii. பொலிஸ் நிலையம்

34. பல், எலும்பு வளர்ச்சிக்கு உதவுவது.

i. கல்சியம்   ii. புரதம்

iii. காபோவைதரேற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. பின்வரும் தாவரங்களில் பானமாகப் பயன் படும் இலை.

i. கோப்பி ii. கொக்கோ
iii. தேயிலை

36. வருடம் முழுவதும் பூத்துக் காய்க்க முடியாதது எது?

i. பப்பாசி ii. தென்னை
iii. மரமுந்திரிகை

37. பூசணிப் பூவின் நிறம் யாது?

i. வெள்ளை ii. மஞ்சள்
iii. ஊதா

38. பின்வரும் பிராணிகளின் கால்கள் எண்ணிக் கையில் கூடுதலாக அமையும் கூட்டம் எது?

i. ஆடுகள் 17, கிளிகள் 13, மயில்கள் 16

ii. குதிரைகள் 04, முயல்கள் 15, மாடுகள் 13

iii. மயில்கள் 20, முயல்கள் 18, காகங்கள் 12

39. எழுத வாசிக்கத் தெரியாக மக்களும் தகவல் களைப் பெற மிகப் பொருத்தமான பொதுசன தொடர்பு சாதனம்.

i. பத்திரிகை ii. தொலைக்காட்சி
iii. கணினி

40. படத்தில் உள்ளவாறு கட்டங்கள் வரைந்து விளையாடும் கிராமிய விளையாட்டு எது?



i. கபடி

ii. சில்லுக்கோடு

iii. கிளித்தட்டு

41. மிக விரைவாக பழுதடையக்கூடிய உணவுப் பொருள் எது?

i. கருவாடு ii. மீன்
iii. இறைச்சி

42. பழப்பாகு தயாரிக்கப் பயன்படும் பழங்கள் யாவை?

i. விளாம்பழம், அன்னாசிப்பழம்

ii. விளாம்பழம், தோடம்பழம்

iii. பலாப்பழம், பப்பாசிப்பழம்

43. காசோலை ஒன்றை மாற்றி பணம் பெறும் இடம்.

i. தபாலகம் ii. வங்கி
iii. கடை

44. கீழே உள்ள படத்தில் மின்குமிழ் எரியக்கூடிய ஒழுங்கமைப்பைக் காட்டும் படம் யாது?



A B C

45. பற்களின் ஆரோக்கியத்தை பேணுவதற்காக பற்பசையுடன் சேர்க்கப்படும் பதார்த்தம் எது?

i. புளோரைட் ii. உப்பு
iii. கல்சியம்

பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் குறிப்பிடுக.

46. உயிர் எழுத்துக்கள் பன்னிரெண்டாகும். ( )

47. பூனை என்பது வினைச்சொல்லாகும். ( )

48. "ெ" இது ஒற்றைக்கொம்பு எனப்படும். ( )

49. குடை பிடித்தால் மழை பொழியும். ( )

50. மின்விசிறி மூலம் காற்றைப் பெறலாம். ( )

ஹூத் (அலை)...
(3ஆம் பக்கம் பார்க்கத் தொடர்...)

தப்பிக் கொள்ளலாம் என்று எண்ணி தம் வீடுகளுக்குள் நுழைந்து கதவை அடைத்துக் கொண்டார்கள். பேரோசை மிக்க சுழலும் காற்றுடன் பாலைவன மண்ணும் கற்களும் சுழன்று வந்தன. அவர்களைத் தாக்கி அழித் தன. ஒரு சில நிமிடமும் மணித்தியாலமுமா? ஏழு இரவுகளும் எட்டுப் பகல்களும்... எப்படி இருந்திருக்கும்? என்னவாகிப் போயிருப்பார்கள்? வேரறுந்து சாய்ந்து சரிந்து விட்ட ஈச்சமரங்களைப்போல் ஆற்றல் மிக்க பலசாலிகள் சரிந்து போனார்கள். சரித்திரம் மறுமை வரை நீண்டு விட்டது. எல்லாம் இணையில்லா அல்லாஹ்வின் தீர்மானம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

வினாப்பத்திரம் II நேரம் 1 மணி 15 நிமிடம்

சரியான விடைக்குக் கோடிடுக.

01. i. நாளை உறவினர் வீட்டுக்குச் சென்றேன்.
 ii. நாளை உறவினர் வீட்டுக்குச் செல்கிறேன்.
 iii. நாளை உறவினர் வீட்டுக்குச் செல்வேன்.

02. i. நான் கடைவீதிக்குச் சென்றோம்.
 ii. நீர் என்ன செய்வீர்.
 iii. அவர்கள் நடனம் ஆடினீர்கள்.

03. i. நாயும் நானும் படகில் ஏறினோம்.
 ii. நீயும் அவர்களும் படித்தார்கள்.
 iii. அவை வீதிக்கு குறுக்கே ஓடியது.

சரியான இணைமொழிககளை தெரிவு செய்து இடைவெளியில் எழுதுக.

(ஆடி அசைந்து, நோய்நொடி, முட்டிமோதி, அல்லும் பகலும் உண்டு உடுத்து)

04. மாட்டு மந்தை .... வீதியைக் கடந்தது.

05. வாலிபன் .... தனது வாழ்வை வீணாக்கினான்.

06. யானை .... காட்டுக்குள் சென்றது.

07. மாணவி .... படித்து பரீட்சையில் சித்தி அடைந்தாள்.

08. சுத்தம் பேணினால் .... இன்றி வாழலாம்.

சிங்கள வாக்கியத்திற்கான கருத்தை தருக.

09. பல்லா புரனவா ....

10. இர பாயனவா ....

ஒத்த கருத்து தருக.

11. ஆசான் ....

12. உவகை ....

மிகச் சரியான விடையின்கீழ் கீறிடுக.

13. சிங்களவர்களும் தமிழர்களும் கொண்டாடும் பண்டிகை எது?
 i. சித்திரைப் புதுவருடப் பிறப்பு
 ii. வெசாக் iii. நத்தார்

14. ஒரு நாட்டின் தேசிய ஒற்றுமை, நாட்டின் கௌரவம் ஆகியவற்றைப் பிரதிபலிப்பது.
 i. தேசிய கொடி ii. பாடசாலைக் கொடி
 iii. பௌத்த கொடி

15. இலங்கையில் அதிக மக்களால் பேசப்படும் மொழி.
 i. தமிழ் ii. ஆங்கிலம்
 iii. சிங்களம்

16. மயிர்க்கொட்டி உருமாற்றம் அடைந்து உருவாகும் பிராணி.
 i. தும்பி ii. ஈசல்
 iii. வண்ணத்துப் பூச்சி

17. இரவில் ஒலி எழுப்பும் பிராணி.
 i. கரப்பான்பூச்சி ii. சில்வண்டு
 iii. மின்மினிப் பூச்சி

18. காந்த திசைக்காட்டி எப்பொழுதும் காட்டும் திசை.
 i. மேற்கு ii. வடக்கு
 iii. கிழக்கு

19. இன்று புதன்கிழமை எனின் நேற்று முன்தினம்.
 i. வெள்ளிக்கிழமை ii. சனிக்கிழமை
 iii. திங்கட்கிழமை

20. மனதிற்கு மகிழ்ச்சியையும் உடலுக்கு உற்சாகத்தையும் தரும் செயற்பாடு.
 i. நித்திரை ii. விளையாடுதல்
 iii. படம் பார்த்தல்

சரியான விடையின்கீழ் கீறிடுக.

21. பின்வரும் எத்தாவரத்தின் பூ, காய், பழம் போன்ற அனைத்தும் உணவுக்குப் பயன்படும்?
 i. பலா ii. வாழை
 iii. முருங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. ஒரு பாடசாலையின் தனித்துவத்தை எடுத்துக் காட்டாத விடயம்.

i. கழுத்துப்பட்டி ii. பாடசாலைக் கொடி
iii. இடுப்புப் பட்டி

23. எந்தவோர் ஆணியையும் இறுக்கவும் கழற்றவும் பயன்படும் சாதனம்.

i. சுத்தியல் ii. குறடு
iii. மட்டப் பலகை

24. பழுதடைந்த உணவின் இயல்பு.

i. சுவை குறைவடைதல்
ii. துர்நாற்றம்
iii. மேற்கூறியவை இரண்டும்

25. முற்பகல் 8.30மணிக்கு அடிக்க வேண்டிய மணி 10 நிமிடங்கள் பிந்தி அடித்தது. மணி அடித்த நேரம்?



26. A பாத்திரத்தால் 10 தடவை ஊற்றியபோது B பாத்திரம் நிறைந்தது எனின், A பாத்திரத்தின் கொள்ளளவு யாது?

27. ஒவ்வொரு பெட்டியிலும் 500 மாம்பழங்கள் கொண்ட இரு பெட்டிகள் இருந்தன. இதில் ஒவ்வொரு பெட்டியிலும் இருந்து 9 மாம்பழங்களை எடுத்தால் இரண்டு பெட்டியில் உள்ள மொத்த மாம்பழங்கள் எத்தனை?

28. 2 லீற்றர் நீரிலிருந்து 1250 மில்லி லீற்றர் எடுக்கப்பட்டால் மீதி நீரின் அளவு யாது?

29. அடைப்புக்கு பொருத்தமான இலக்கம் எது?

30.
```
  5 4 5 -
  9 □ 7
  -----
  3 0 0
```
அடைப்புக்கு வரவேண்டிய இலக்கம் எது?

```
  3 3 2 +
  6 □ 9
  -----
  1 0 0 1
```
அடைப்புக்கு வரவேண்டிய இலக்கம் எது?

31. 

வீட்டிலிருந்து பாடசாலைக்கு சென்று மீண்டும் வீட்டிற்கு சென்றால் அவன் பயணிக்க வேண்டிய தூரம் யாது?

ஆங்கில வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.

32. I wish you: ....

33. Good boy: ....

பின்வரும் படங்களின் பெயர்களை எழுதுக.



34. .... 35. .... 36. .... 37. ....

இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

38. XYZ என்பது ZYX என எழுதப்படின் DEF என்பது .... என எழுதப்படும்.

i. FED ii. EFD iii. DFE

39. 759 என்பது 957 என எழுதப்படின் 637 என்பது .... என எழுதப்படும்.

i. 763 ii. 376 iii. 736

40. 
இவ்வடிவத்தில் எத்தனை முக்கோணங்களை வெட்டி எடுக்க முடியும்?

கோலத்திற்கேற்ப A, Bயின் பெறுமதியை எழுதுக.



41. A ....
42. B ....

வசனத்தை ஒழுங்கமைக்குக.

43. பூரணப் - மனிதனைப் - வாசிப்பு - படுத்தும்

44. பாலும் - பழகப் - புளிக்கும் - பழகப்

எதிர்ப்பாற் கருத்துக்களை தருக.

45. குயவன்: ....

46. மாணவி: ....

47. பிதா: ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் படத்திற்கு மிகப் பொருத்தமான படத்தை தெரிந்து கோடிடுக.

48.



i ii iii

49.



i ii iii

50.



i ii iii

51.



i ii iii

எதிர்க்கருத்து சொற்களைத் தருக

52. வானம்:

53. இலாபம்:

சரியான விடைக்குக் கோடிடுக.

54. அப்பா வங்கியில் (பணி, பனி) புரிந்தார்.

55. கமலன் ஒரு (கோலை, கோழை).

56. அதிபர் (உறை, உரை) நிகழ்த்தினார்.

57. (அளை, அழை) யில் எலி வந்தது.

நான் கடலில் கண்ட அரிய மீன் என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலை போன்றன பேணப்பட்டிருத்தல் வேண்டும்.

58. ....

59. ....

60. ....

5 தரம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி

ஏ.பீ.எப். சம்லா (151)

குளி / மடிகே அனுக்கன மு. ம.வி.

எம்.ஐ. நதா (177)

மா/ ஆமினா மகளிர் தே.பா. மாத்தளை.

எம்.எஸ்.எம். அஸ்ரிப் (159)

குளி / மடிகே அனுக்கன மு. ம.வி.

எம்.எச்.எப். ஹப்ஸா (158)

மாறை/வெலிகம அந்நூர் முஸ்லிம் ம.மகா.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி

கே/மாவ/ அல்அஸ்ஹர் ம.வி. (நவோதய பாடசாலை) ஹெம்மாதகம

எம்.ஆர்.எப். ருமானா (180)

எச்.எம்.எப். ஹய்பா (174)

ஆர்.எஸ்.எப். ஸெய்னப் (170)

எம்.டபிள்யூ. அஸ்மா (169)

எம்.என்.எப். இல்மா (164)

ஏ.எச். ஹம்தா பானு (159)

எம்.ஏ.எம். அஸ்பான் (1159)

எம்.என். நவால் (156)

ஏ.ஏ.ஏ. அலா (154)

எம்.ஏ.எப். அம்னா (154)

எம்.ஐ. அப்தல் (153)

என்.பீ.எப். ஹஸ்ஸா பானு (151)


எம்.ஆர்.எப். மஸிஹா (151)

எம்.ஏ. அனீகா (150)

எம்.எம்.எம். நாஸிக் (150)

எம்.எம்.எம். ரிஸ்னி (150)

www.aharam.lk

facebook இல் Like செய்யுங்கள்...
www.facebook.com/aharamJmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Islamic Book Houseஇன் 2013ஆம் ஆண்டிற்கான வெளியீடுகள்

புலமைப் பரிசில் மாணவர்களுக்கான கடந்தகால வினா விடைகள்: 2005-2012 (தரம் - 05)

265/=

கணிதப் புதிர் வினா விடை நூல் (தரம் - 05)

450/=

இஸ்லாம்
தரம் 1 முதல் 5 வரை

150/=



பாலர் தமிழ் எழுத்துப் பயிற்சி
100/=

பாலர்களுக்கான புத்தகங்கள்



பாலர் அரபு

100/=



சிறுவர்களுக்கான அரபு மொழிப் பயிற்சி
தரம் - 01

175/=



பாலர் அரபு
(எழுத்துப் பயிற்சி)

150/=



தமிழ் மொழி வழிகாட்டி
தரம் 3 முதல் 5 வரை
350/=

பாலர் கணித வழிகாட்டி
தரம் - 01

165/=



முன்பள்ளி இலகு பாலர் வழிகாட்டி 2 (தரம் - 01)

165/=

முன்பள்ளி இலகு பாலர் வழிகாட்டி

165/=



English Class Work Book
தரம் 1 முதல் 5 வரை
200/=



மொழிப் பேழை
தரம் 3,4,5

350/=

கணிதம்
தரம் 1 முதல் 4 வரை

300/=

தமிழ் செயல் நூல்
தரம் 1 முதல் 5 வரை

300/=



දෙමළ (Link language - Tamil)
தரம் 3 முதல் 5 வரை 160/=

Islamic Book House 77, Dematagoda Road, Colombo 09. Tel: 0112684851, Fax: 0112688102 Web: www.ibh.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org